# COUNTRY HERALD.

# கிராம தூதன்.


கௌரவ பத்திராதிபர்:

**இரா. கு. நல்லகுற்றாலம் பிள்ளை, சிவில்ஸி...ார்.**



OFFICE OF THE REGISTRAR
14 FEB 1942
MADRAS



**1942 பிப்ரவரி**

மலர்-ச. இதழ்-உ


## வாழ்க்கை முறை.

1. நாம் பிறர் ஆக்கத்துக்குத் துணையாகவும் வாழவேண்டும்; அது முடியாது போயினும், பிறர் கேடு சூழாதேனும் வாழவேண்டும். பிறர்க்கின்னா நாம் முற்பகலில் நினைக்க, நமக்கின்னா பிற்பகலிலேயே திட்டமாக விளைந்துவிடும். ஆதலால், நாம் பிறரைக் கெடுத்து வாழக்கூடியதில்லை.

நம் பெற்றோர்கள் நம்மை வளர்த்துவிட்டபடி நாமும் இவ்வுலக வளர்ச்சிக்காக நம் மக்களை வளர்த்துவிட வேண்டும். நாம் பிறந்த இவ்வுலகை, நாம் பிறந்த காலத்திலும் செம்மையுறச் செய்திடவும் வேண்டும்.

நாம் நம் குடும்பத்தினருக்கு அவரால் தம்மைத்தாமே பேணிக் கொள்ளமுடியாத அளவிற்குக் கைம்மாறு கருதாதும் உதவிவருவதுபோல, இவ்வுலகமாம் பெருங் குடும்பத்தினரான பிறருக்கும் உதவிவரும் அளவிற்கே, இவ்வுலகம் நாம் வாழ்வதற்கேற்ற இடமாகும். பிறருக் குதவியில்லா நாட்டிலும் கொடும்புலி வாழுங் காடு நன்றேயாகும்.

**இரா. கு. நல்லகுற்றாலம் பிள்ளை.**

2. ...ங்கு ஏழை
க... ; இனி,
...ழுத்தாக
...படி ஒழு
...க்களும்
...; தவறி
...ண்ணம்.

**...ாத் தாக்கூர்.**


Y31m 21195, N35
GT
42.4.2
207594

**சுழன்றும், ஏர்ப்பின்னதுலகம்—திருவள்ளுவர்.**

## விசேடக் கட்டுரைகள்.


1. கிராம வேலை.
2. நெல்லுக் குரமிடுதல்.
3. கூட்டுறவு கைத்தறி நெசவுகாரரைக் கைதூக்கி விடுமா?
4. ஊசி எப்படிச் செய்யப்படுகிறது?
5. குழந்தைக்குக் கீழ்ப்படிதல் கற்பிப்பதெப்படி ?
6. நாட்டுப்புறப் பணப் புழக்கம்



(உட்பக்கம் பொருளடக்கம் பார்க்க)



பிரசுரகர்த்தர்:

**இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன்,**

வடக்குச் சித்திரை வீதி, மதுரை.

# பொருளடக்கம்


| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | **கடவுள் வணக்கம் : பிரார்த்தனை** | 33 |
| 2. | **பொன்னுரைகள் : பொற்புக்கு மணிகள்** | 34 |
| | நமது குழந்தைக்கு நான்காவது வயது ஆரம்பம் | 35 |
| 3. | **கிராம வேலை** | 36 |
| 4. | நெல்லுக் குரமிடுதல் | 39 |
| 5. | கூட்டுறவு, கைத்தறி நெசவுகாரர்களைக் கைதூக்கி விடுமா ? | 41 |
| 6. | ஆரம்பப்பள்ளிப் பாடத்திட்டக் குறிப்புக்கள் | 44 |
| 7. | ஊசி எப்படிச் செய்யப்படுகிறது ? | 45 |
| 8. | சுகாதாரம்: குடும்ப வாழ்க்கை | |
| | அ. குழந்தைக்குக் கீழ்ப்படிதல் கற்பிப்பதெப்படி ? | 46 |
| | ஆ. நாட்டு வைத்தியம் மிருகவாகடம் பாகமுறை வாழ்க்கைக் குறிப்புக்கள் | 49 |
| 9. | நாட்டுப்புறப் பணப் புழக்கம் | 50 |
| 10. | காணமற் போன முத்தாரம் | 54 |
| 11. | செய்தித் திரட்டு: | |
| | அ. விவசாய வியாபாரக் கைத்தொழிற் செய்திகள் | 56 |
| | ஆ. கிராமப் புனருத்தாரண தலதாபனச் செய்திகள் | 57 |
| | இ. கூட்டுறவு கல்வி சுகாதாரச் செய்திகள் | 57 |
| | ஈ. கூட்டச் செய்திகள் : தீர்ப்புக்கள் | 57 |
| 12. | அறிவுரைத் திரட்டு: | |
| | அ. விவசாய வியாபாரக் கைத்தொழிற் குறிப்புக்கள் | 57 |
| | ஆ. கிராம முன்னேற்ற தேச முன்னேற்றக் குறிப்புக்கள் | 61 |
| | இ. இலக்கிய இலக்கண அருங்கலை போதனா முறை ஆராய்ச்சிக் குறிப்புக்கள் | 62 |
| | ஈ. சிறந்த வாசகங்கள், செய்யுள்கள், அறவுரைகள், பழமொழிகள் | 63 |


---

## புத்தகங்கள், பத்திரிகைகள், அறிக்கைகள் வரவு.

*கீழே காணும் பிரசுரங்களைப் பெற்றிருக்கிறோம்; அவற்றை உதவியவர்களுக்கு நம் நன்றியையும் செலுத்திக்கொள்ளுகிறோம்.*

1. Indian Information. Nos. 84-86.
2. Bombay Information. Vol. ii. Nos. 46-52. iii. Nos. 1- 3.
3. Mysore Information. iv No. 11.
4. Hyderabad Information. Vol. ii. Nos. 3-4.
5. ,, Press Notes, Communiques etc.
6. Madras Press Notes Nos. 185-206 of 1941. 1. 16 of 1942.
7. ,, Press Communiques. No. 67-76 of 1941 Nos. 1-3 and 5-8 of 1942
8. கூட்டுறவு மலர் 13. இதழ்கள் 11-14.
9. பாலர் கல்வி. தொகுதி 6. பகுதிகள் 9-10.
10. செங்குந்த மித்திரன் மலர் 15 இதழ் 11. 16 இதழ் 1.
11. செந்தமிழ்ச் செல்வி சிலம்பு 19. பரல்கள் 8-9
12. நல்வழி மலர் 30. இதழ் 12. மலர் 31. இதழ் 1.
13. வர்த்தக ஊழியன். எண்கள் 113-114.
14. வித்தியாதனம் தொகுதி 6. பகுதிகள் 9-10.
15. மிராசுதார் தொகுதி 8. பகுதிகள் 3-4.
16. தமிழணங்கு தொகுதி 2. பகுதி 7.
17. சிறுவர் அறிவுக் கதிர். தொகுதி 6. பகுதி 7.
18. யுத்தப்படங்கள் எண்கள் 9-10.
19. போதனா முறை தொகுதி 32. எண்கள் 6-7.
20. சத்தியபோதினி தொகுதி 31. பகுதி 12. 32. பகுதிகள் 1-2.
21. கிராமப் பஞ்சாயத்து தொகுதி 4 பகுதி 9.
22. தேவி தொகுதி 1. பகுதிகள் 2-3.
23. ஞானசம்பந்தம் தொகுதி 1. பகுதிகள் 1-2.
24. Independent Vol. 7. No. 20.
25. MadrasDirector of Agriculture PressNotes.
26. G. O. 1966. Dev. dd. 2-12-41.
27. Panchayat Bill 1938. Editor-The Village Panchayat Journal, Madras.
28. Review of the Co-op. Movement in India. 1939-40. Reserve Bank of India, Bombay.
29. All India Spinners Association Report., 40
30. Presidential address of Rao Bahadur T. A. Subbiah Pillai. Retired Dt. Judge.

# THE COUNTRY HERALD

# கிராம தூதன்

ஒரு கிராம முன்னேற்ற தேசிய மாதப் பத்திரிகை.

"வீடுதோறும் கல்வியெனும் விளக்கேற்றி வைப்போம்;
வாடுகின்ற மன்னுயிரின் வறுமையினைத் தீர்ப்போம்."

இரா. கு. நல்லகுற்றாலம் பிள்ளை, கௌரவ பத்திராதிபர், ஸ்ரீவில்லிபுத்தூர்.

| மலர்: ச | 1942, பிப்ரவரி—விசு, மாசி | இதழ்: உ |
|---|---|---|


## 1. கடவுள் வணக்கம்: பிரார்த்தனை

உயர்வற வுயர்நல முடையவன் எவனவன்
மயர்வற மதிநல மருளினன் எவனவன்
அயர்வறு மமரர்க ளதிபதி எவனவன்
துயரறு சுடரடி தொழுதெழென் மனனே!

—நம்மாழ்வார்.

என் மனனே! எவன் உயர்வு அற உயர் நலம் உடையவன் அவன் மயர்வு அற மதிநலம் அருளினன்; அவன் அயர்வு அறும் அமரர்கள் அதிபதி; அவன் துயர் அறு சுடர் அடி தொழுது எழு.

### உழவின் உயர்வு

நிலமிருந்து மழைவிழுந்து நீர்வளஞ் செழிக்குமேல்
கலமிருந்து விளைவுகாணும் நமதுழைப்பிங் கேனென்பார்
பலமிழந்து வரவுகுன்றிப் பதவிதாழ்ந்து மிடியெனும்
இலமிருந்து பசிவருந்த ஏங்குவாரென் செய்வரால்!

—ஓர் கிராமவாசி.

பொதுநல ஊழியத்தில் செலவிடுகிறதாக நிச்சயித்து அதை அனுபவத்திலும் காண்பித்து வருவது போலவே நாமும் நமது ஆயுள் முழுவதிலும் இப்பத்திரிகையை ஆதரித்து அதை அனுபவத்திலும் காண்பித்து வரவேண்டுமல்லவா? சந்தாதாரராகிய நாம் ஒவ்வொருவரும் ஒரு புதிய சந்தாவைச் சேர்த்துக் கொடுக்க வேண்டுமென்று ஊக்கங்கொண்டால் அது முடியாத காரியமா? அதன் மூலம் பல துளி பெரு வெள்ளமாகி ஏராளமான சந்தாதாரர்கள் சேர்ந்துவிடத் தடை என்னே? நம் நாடு செழித்து நாம் நல்வாழ்வு வாழவேண்டாமா? என்னும் தலையங்கத்தின் கீழ் மாதந்தோறும் வெளிவரும் விஷயங்களையாவது நாம் ஒரு முறையல்ல நூறு முறை வாசித்தாலும் நூறு மடங்கு அவை நமக்கு நன்மை பயக்கும் என்பதை நாம் மறந்துவிட முடியுமா? ஒரு நொடிக்குள் ஒரு ரூபாவைச் செலவு செய்து விடுகிறோமே! அவ்வாறு செலவிடும் நாம் ஒரு வருஷத்தில் ஒரு ரூபாவில் நடைபெறும் இப்பத்திரிகையை ஆதரிக்கிற விஷயத்தில் யாருக்கோ வந்த விருந்தென அசட்டையாயிருக்கலாமா? "கரும்பு கட்டோடு கிடந்தால் எறும்பு தானே வரும்" என்ற பழமொழி மூவறிவு படைத்த ஒரு சிறிய சீவனை முன்னிட்டெழுந்த தென்றால் ஆறறிவு படைத்த நமக்கு வேறு ஒரு பழமொழியும் வேண்டுமா? "சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்" என்றார் நமது பாரதியார். நாம் அவ்வளவு பெரிய தொண்டில் தலையிட முடியாமல் போனபோதிலும் இச்சிறிய தொண்டிலேனும் ஈடுபடுவோமாயின் நாமும் முன்னேறுவோம்; நமது நாடும் முன்னேறி வரும். இந்த உதவிகூட நம்மிடத்திலிருந்து எதிர்பார்ப்பதற்கில்லை என்றால் "அது நமது நாட்டிற்கே பெரிய ஒரு நட்டம்" என்று தான் நாம் உணரவேண்டும். இனியாவது இத்துறையில் நமக்கு ஊக்கமுண்டாக எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவானாக!

இங்ஙனம்,
இப்பத்திரிகையின் சந்தாதாரரில் ஒருவரான
ஓர் கிராம வாசி.

---

3. தலையங்கம்:

# கிராம வேலை

நம் நன்மையே முக்கியமாகக் கருதவேண்டிய நம் அரசாங்கமும் தலைவர்களும், தங்களுக்காக நம் உடல், பொருள், ஆவி மூன்றையும் தத்தம் செய்ய வேண்டுமென்கின்றனர்; நம் நேரத்தையும் பணத்தையும் பெருமிதமாகச் செலவழிக்க வேண்டுமென்றும் விரும்புகின்றனர். நாம் அவ்வாறு செய்யக் கடமைப்பட்டிருக்கின்றோமென்றாலும், அவர்களும் அவ்வாறே நம் நன்மையை முக்கியமாகக் கவனிக்கக் கடமைப்பட்டிருக்கவில்லையா? நம் நன்மையை அவர்கள் கவனிக்கிறதில்லையென்றால், நம்மைத்தான் ஏன், அவர்கள் பைத்தியக்காரர்களாக்கவேண்டும்?

நிலவரி அனேகமாக நிகரவரவில் பேர்பாதியாகவும் அதற்கதிகமாகவும் இருந்து வருவதைக் குடிகள் தாங்கமுடியாதென்றும் அதனை எங்கும் ஒரே மாதிரியாகக் கால்வாசியாக்கிவிட வேண்டுமென்றும் இந்தியத் தீர்வை விசாரணைக் கழகம் பதினைந் தாண்டுகளுக்கு முன் சிபார்சு செய்ததை இதுவரை அமுலுக்குக் கொண்டுவந்திருக்கிறார்களா? நம் விளைவைப் பெருக்கத் தண்ணீர் வசதியைப் பெருக்கித் தருகிறார்களா? நம் விளைவிற்கு நல்ல விலை கிடைக்கச் செய்கிறார்களா? நமக்கு விவசாய வேலைகளில்லாத காலத்திலும் நேரத்திலும் வேறு சிறு தொழிலிலும் குடிசைத் தொழிலி

ளும் ஈடுபட உதவுகிறார்களா? ஏற்கனவே விவசாயம் மிச்சந்தரா திருந்துவர, நாளுக்கு நாள் அதிகமாகப் பெருகிவரும் நருளும் வேறு துறைகளில் வேலை கிடைக்காமலும் வேலை கிடைத்தாலும் கூலி கட்டாமலும் உழவுத் தொழிலுக்கு வந்து குவிவதை வேறு துறைகளுக்கேனும் திருப்புகிறார்களா? இப்படியாக, நாளுக்குநாள் நலிந்து உண்டு உரஞ் செய்யவும் முடியாத நிலைமையிலிருக்கும் நாம் அதிகாரத்திலும் செல்வத்திலும் திகழும் அவர்களைத் தாங்கிப் போற்றிவருவது எப்படிச் சாத்தியமாகும்? அவர்கள் அவாவை நாம் நிறைவேற்றுவதற்காக வேனும், நம் நிலைமையை அவர்கள் உயர்த்திவர வேண்டுமல்லவா?

விளைவைப் பெருக்க வேறு வசதிகள் செய்யாது போயினும், நம் ஆறுகளிலும் ஓடைகளிலும் ஓடிக் கடலுக்கு அவமாகச் செல்லும் தண்ணீரையேனும் வாய்ப்பான இடங்களில் தேக்கிக் கூடியவரை நமக்கு உதவக்கூடாதா? குளங்களையும் கால்களையும் மேல்மண் மெத்திக்கொண்டு வருவதையேனும் தடுத்து அதிகத் தண்ணீர் கட்டும்படியாகவும் பாயும்படியாகவும் செய்யக்கூடாதா? இவற்றை மட்டுமே நம் அரசாங்கமும் தலைவர்களும் நமக்குச் செய்வதாயிருப்பினும், நாம் அவர்கள் பால் எவ்வளவோ அன்பும் ஆர்வமுமுள்ளவர்களாக இருப்போமே!

மஞ்சளையும் பணத்தையும் கரியாக்கிக் கொண்டிருக்கும் இந்தக் காலத்தில், நாமும் நம் அரசாங்கமும் மரத்தைக் கரியாக்கிக் கொண்டிருப்பதை அத்துணைப் பெருங்குற்றமாகச் சொல்லுவதற்கில்லை. நம் முன்னோர்கள் பச்சை மரத்தை வெட்டுவதைக் கொலைக்கு ஒப்பாகக் கொண்டிருந்தனர்; மரத்தை வைத்துண்டுபண்ணுவதை முப்பத்திரண்டு அறங்களிலொன்றாகக் கருதி அவற்றை வளர்த்து வந்தனர். நாம் வெட்டும் மரம் ஒன்றுக்கு நட்டும் மரம் ஒன்பதாகச் செய்யாதுபோனாலும், ஒன்றுக்கொன்றேனும் வைத்துவர வேண்டாமா? அரசாங்கமேனும் இதற்கு வழி காட்டவேண்டாமா?

கிராமாபிவிருத்தி வேலைகளைத் தீவிரமாகக் கிராமங்களில் செய்து வருவதற்காகச் சென்னை சில்லாக் கலக்டர்கள் மகாநாடு கூடப் போவதாகப் பத்திரிகையில் படித்தோம். இதுவரை கூடியதாக இல்லை. இனி எப்பொழுது கூடுமோ! எவ்வித முடிவுக்கு வருமோ! என்றும் நாம் சொல்லுவதற்கில்லை. என்றாலும், தண்ணீர் வசதியைப் பெருக்கித் தரவேண்டும்; மரங்களை வளர்த்து வரவேண்டும்; இந்த இரண்டு காரியங்களையேனும் கட்டாயம் செய்து தீரவேண்டுமென்று வற்புறுத்துவோம். இவற்றோடு இதனடியிற் காணும் மாதிரியாக வேலைசெய்து வருவதும் மிகுந்த நலந்தருமென்றும் சொல்லுவோம்.

தாலுகாவிற்கொரு கிராமமாக, இருநூறு முந்நூறு வீடுகளுக்குக் குறையாதும் நானூறு ஐந்நூறு வீடுகளுக்கு மேற்போகாதும் இருப்பதும் ஒரே இனமாக வேனும் கட்சிப் பிரிவினைகளில்லாமல் ஒற்றுமையாகவேனும் வாழும் குடிகளும் கூடியவரை தண்ணீர் வசதியும் செழிப்பான நிலங்களு முடையதுமாகப் பொறுக்கி, அந்தக் கிராமத்தாருடன் அந்தத் தாலுகா தாசில்தாரும் விவசாய இலாகா குளம் மராமத்திலாகா காட்டிலாகா கால்நடையிலாகா சுகாதார இலாகா கல்வியிலாகா கூட்டுறவு இலாகா கைத்தொழிலிலாகா பஞ்சாயத்திலாகா அதிகாரிகளும் கலந்து அந்தக் கிராம அபிவிருத்திக்காகச் செய்ய வேண்டியனவற்றை நாலைந்து வருடங்களில் செய்து முடிப்பதற்கான திட்டத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அதற்கவசியமான சட்ட திட்டங்களையும் அமைத்துக் கொள்ள வேண்டும். அவற்றின்படி செய்துவரவும் வேண்டும்.

வளம்பட வேண்டாதார் யார்? யாருமில்லை! என்று நாலடியாரில் கூறியபடி, தங்கள் விருத்திக்காக அரசாங்க அதிகாரிகளும் பாடுபடும்

பொழுது, அவர்களோடு ஒத்துழைத்து முழுப் பயனையும் அடைவதற்கு எவரும் தயங்கார். நிலங்களில் விழும் தண்ணீரை, அவற்றில் பயிரிருந்தால் அதற்குச் சேதமாகாதிருக்கும் அளவிற்கு வடியவிட்டும் மற்றப்படி அந்தந்த நிலங்களிலேயே அந்தத் தண்ணீர் ஊறிக் கீழே இறங்கி நிற்கும்படியும் வரம்புகள் கட்டவும் அறுத்துப் பிடுங்கி களை யடைக்கவும் மேடு பள்ளங்களைத் தட்டுத்தட்டாக அமைக்கவும் தூண்ட வேண்டும். செலவைச் சுருக்கவும் வரவைப் பெருக்கவும் கூடிய முறைகளையும் கருவிகளையும் உரங்களையும் விதைகளையும் தாராளமாகக் கையாளச் செய்யவேண்டும். கிணற்றுச் செலவுக்கும் அதிகமாக, பத்து இருபது வருடங்களுக்குள்ளாகவே அதிக விளைவையும் மிச்சத்தையும் காணக்கூடு மென்றால், அப்படி நிலங்களிலெல்லாம் கிணறுகள் வெட்டுவதற்குத் தக்காவிக் கடன்களைக் கூட்டுறவுச் சங்கம் மூலம் உதவிவரவேண்டும். அந்தச் சங்கத்தின் மூலமாக அவர்கள் விளைவுக்கு நல்லவிலை கிடைக்கவும் அவர்களுடைய தேவைகளைச் சௌக்கியமாகப் பெறவும் ஏற்பாடு செய்ய வேண்டும். விவசாய வேலை முடிந்த காலத்தில், விவசாய அறிவையும் சுகாதார அறிவையும் பொது அறிவையும் பெருக்க ஒருவாரமேனும் படக்காட்சிகளும் கண்காட்சிகளும் காட்டவேண்டும். நல்ல விதைகளைக்காட்டி, அவற்றினால் அவர்கள் அடையக்கூடிய பலனையும் விளக்கிச் சொல்லவேண்டும். வீரத்தைப் பெருக்கக்கூடியதும், நல்ல நீதிகளைப் புகட்டக்கூடியதும், படிக்கக் கற்றுக்கொள்ள வேண்டுமென ஆசையை ஊட்டக்கூடியதுமான கட்டபொம்மு கும்மி தேசிங்கு கதை மரியாதை ராமன் கதை தெனாலிராமன் கதை சூரபத்மன் போர் வாலி சுக்கிரீவன் சண்டை அபிமன்னியு சண்டை இவற்றையும் இவை போன்றவற்றையும் விவசாயம் சுகாதாரம் கால்நடை முதலியவற்றைப் பற்றிய பத்திரிகைகளையும் வாசித்து அவற்றை அவசியமான இடங்களில் விளக்கவும் வேண்டும். படிக்க விரும்பும் முதியோருக்கு எழுத்தறிவைப் புகட்டவும் வேண்டும். கிராமப் பஞ்சாயத்துக் கூட்டுறவுச் சங்கம் பள்ளிக்கூடம் பசனைக்கூடம் வாசகசாலை இவற்றின் மூலமாக அவர்களடையக் கூடிய நன்மைகளையெல்லாம் உணரவும் அவற்றை அடையவும் தூண்ட வேண்டும். கிராமப் பள்ளி ஆசிரியர்களையும் கிராமாபிவிருத்தி வேலைகளில் அவர்களுடைய பள்ளிவேலைகளுக்குப் பாதகமின்றி ஈடுபடத் தூண்ட வேண்டும். விவசாய வேலைகளுக்குப் பாதகமின்றி என்றைக்கும் செய்துவரக்கூடிய பாற்பண்ணை வேலைகளையும் ஆடு கோழி வளர்ப்பையும் செய்துவரத் தூண்டவும் வேண்டும். விவசாய வேலையில்லாத காலங்களில் விவசாயத்திற்குப் பயன்படக்கூடியதும் அதனை அதன் விளைவைச் சேர்ந்ததுமான சிறு தொழில்கள் குடிசைத் தொழில்கள் இவற்றில் ஈடுபடவும் தூண்ட வேண்டும். அந்தச் செய் பொருள்களுக்கு நல்ல விலை கிடைக்கவும் ஏற்பாடு செய்ய வேண்டும். இப்படியாகக் காலத்தை வீணாக்காது உழைப்பைக் கேவலமாகக் கருதாது பல துறைகளிலும் ஈடுபடவும், வரவைப் பெருக்கியும் செலவைச் சுருக்கியும் சாவகாசத்தையும் அறிவையும் வளர்த்தும் வர, நம் அரசாங்கமும் தலைவர்களும் நமக்கு உதவுவார்களென்றால், அவர்கள் நமக்குக் கண்கண்ட தெய்வமாகமாட்டார்களா? அவர்களுக்காக நம் உடல் பொருள் ஆவி மூன்றையும் தத்தம் செய்ய நம் மனம்தான் பின்வாங்குமா?

இப்படியாக, வருடந்தோறும் ஒவ்வொரு கிராமத்தில் புதிதாக வேலையாரம்பித்தும் முன் கிராமத்திய வேலைகளையும் விடாது நாலைந்தாண்டுகள் செய்துவந்தால், பின் அந்த அனுபவத்தையும் வைத்துப் பத்தாண்டுகளுக்குள் எல்லாக் கிராமங்களிலும் திருத்தங்களை யமைத்துவிடலாம். ஒவ்வொரு குடும்ப ஆண்டுச் சராசரி வரவையும் ரூ. 300 ஆகவும் ஆக்கிவிடலாம். நம் வரவு அதிகமாக அதிகமாக, அஃது அரசாங்கத்துக்கு அதிக வரி செலுத்தவும் இடந்தரும். அந்த அதிக வரியை வைத்தே அபி

திருத்தி வேலைகளையும் செய்து வரலாம். இப்படியாக, நமக்கும் அதிகச் சிரமமில்லாமல் அரசாங்கத்துக்கும் சிரமமில்லாமல் நாட்டின் நலத்தையும் நம் மறிவையும் சௌகரியங்களையும் பெருக்கிக் கொள்ளப் போதிய சாவகாசத்தையும் வளர்த்துக் கொள்ளலாம்.

நம் அரசாங்கமும் தலைவர்களும் இவற்றைக் கவனிப்பார்களா?

---

**4. வேளாண்மை:**

# நெல்லுக் குரமிடுதல்

## Chapter XI, Rice in Madras, By Ramiah

### (சாரம்) V

### கரிம உரங்களும் கனிய உரங்களும்

கரிம உரங்கள்

மாட்டுச் சாணம்: கரிம உரங்களில் மாட்டுச் சாணமே எங்கும் கிடைக்கக்கூடியது. நெற்பயிருக்கும் உரமாக இடப்படுகிறது. இதனை நிரம்பச் சிறந்த உரத்திற்கு அடுத்த தரமாக வேனும் சந்தேகமில்லால் சொல்லலாம். என்றாலும், அது வேண்டிய அளவு கிடைப்பதில்லை. தஞ்சாவூர் தீரவாசத்தில், காடுகளும் பக்கத்திலில்லை. ஆதலால், அஃதொன்றுதான் சாதாரணமாகக் கிடைக்கக்கூடிய உரம். வீட்டுக்கு வேண்டிய உரம் கிடைப்பதும் அரிதாக இருப்பதால், மாட்டுச் சாணத்தின் பெரும் பாகம் வறட்டியாக எரிக்கப்படுகிறது. ஆகையால், வேண்டிய அளவிற்குப் பத்திலொரு பங்குகூட அது கிடைப்பதில்லை. கிடைக்கும் சாணியுரமும் சரியாகச் சேர்க்கப்படுவதுமில்லை. பாதுகாக்கப் படுவதுமில்லை. அதனால், அது சத்துக் குறைந்ததாகவே யிருக்கிறது. கிடைக்கு மட்டில், அதனை நாற்றங்காலுக்கும் இரு பூ நிலங்களில் முதல் பூவிற்கும் உரமாக இடுகின்றனர். இப்படியாக, இந்தச் சில்லாவில் நிலச் செழுமை மிகவும் குறைந்த நிலைமைக்கு வந்து விட்டது.

கலப்புரம்: (Compost) சாணியுரம் போதாதிருந்தால், இலை தழை கழிவையெல்லாம் கலப்புரமாக்கிக்கொள்ளலாம். கலப்புரம் பல வகையாகச் செய்யப்படுகிறதென்றாலும், இந்தூர் முறையே சிறந்ததாகக் கருதப்படுகிறது. பண்ணைக் கழிவையெல்லாம் அதன்படி பயன்படுத்திக் கொள்ள முடியும். அதனை அந்தந்தப் பிரதேசத்திற்குத் தகுந்தபடி சுருக்கிக்கொள்ளவும் மாற்றிக்கொள்ளவும் செய்யலாம். நம் மாகாணத்தில் கலப்புரம் செய்யக் குழி (Pit method) முறை அனுட்டிக்கப்படுகிறது. அஃது இலேசாகச் செய்யக் கூடியதாகவும் திருப்திகரமானதாகவு மிருக்கிறது.

சாதாரணத் தெருக் குப்பையும் நெற்பயிருக்குச் சிறந்த உரமாகும். மற்றப் பயிர்களுக்கு உபயோகிப்ப தென்றால், அதனை முதலாவதாகக் கலப்புரமாக்கிக்கொள்ள வேண்டும். நெற் பயிருக்கு நிலத்திலேயே நேராக அடித்துப் பிறகு தொளி கலக்கும் பொழுது நுரைக்கும்படி செய்து கொள்ளலாம். மதுரை சில்லா பெரியாற்றுப் பிரதேசத்தில் உவர் கொதிக்கக்கூடிய நிலங்களுக்குப் போட்டதிலும் திருப்திகரமாகவே யிருக்கிறது.

மல உரம்: இதுவும் நெல்லுக் கேற்ற உரமாகும். இதனை எடுத்து உபயோகிப்பதற்குச் சௌகரியமாக, அப்படி உபயோகப்படுத்துமுன் கலப்புரமாக்கிக் கொள்ளவேண்டும். அரசாங்கப் பண்ணைகளில் இதனை உபயோகிப்பதால் நல்ல பலன் கிடைத்திருக்கிறது.

சப்பானில் நெல்லுக்கு இதுவே முக்கிய உரமாக இடப்படுகிறது. அங்கே அதிக மேனியும் காண்கிறது.

பிண்ணாக்கும் மீனுரமும்: இவற்றைக் கிடைக்கக் கூடிய அளவிற்கும் வாங்கக் கூடிய அளவிற்கும் ஏற்ற உரமாக உபயோகிக்கலாம். இவற்றில் குழையிலிருப்பதைக் காட்டிலும் அதிகமாகக் காலகமும் கனியப் பொருள்களுமிருக்கின்றன. இவற்றைப் பூரண உரமாகவும் கொள்ளலாம்; இவற்றோடு, வேறு உரங்கள் சேர்க்க வேண்டுமென்பதுமில்லை. எலும்பு மாவில் (Bone meal) எரியக்காடி அதிகமாக இருக்கிறது; காலகமும் போதுமான அளவு இருக்கிறது. நிலத்தோடு மக்கும் பொழுது, அது நல்ல உரமாகிறது. அது குழையோடு மக்கினால், அதிலுள்ள எரியக்காடி விரைவாக உரமாக உதவுவதால், அது குழையோடும் உபயோகிக்கப்படுகிறது.

கிருட்டிண போன்ற சில இடங்களில் வைக்கோல் தாளே உரமாக உபயோகிக்கப்படுகிறது. அஃது உவரைப் போக்குவதற்கு நல்ல உரமாகவும் கருதப்படுகிறது. அப்படி நிலங்களில் தக்கைப்பூண்டும் பயிரிடக்கூடுமாதலால், வைக்கோல் தாள் அத்துணை பிரயோசனமுள்ளதாகச் சொல்லமுடியாது.

கிருட்டிண தீரவாசத்தில் செய்வது போல், மாகாணத்தில் மற்றும் சில பாகங்களிலும் பழைய ஊரடி மண்ணை நெல்லுக்குரமாக இடுகின்றனர். அது மிகுந்த பயன் தரக்கூடியதாகவும் கருதப்படுகிறது. ஆனால், அப்படி மண் இனிமேலும் கிடைக்கக்கூடியதில்லை.

## கனிய உரங்கள்.

எரிகை உரங்கள்: இவற்றில் மேல் எரிகக்காடியே (Super phosphate) முக்கியமானதாகும். அது எளிதாகக் கரையக்கூடும். ஆதலால், பயிருக்கும் இலேசாக உபயோகப்படும்.

காலக உரங்கள்: இவற்றில் முக்கியமான உரம் நவச்சியக் கந்தகை (Ammonium sulphate) யாகும். இது நெல்லுக்கேற்றது. சீக்கிரமாகப் பயன்படக் கூடியது. இதன் விலை அதிகமாக இருந்தாலும் நெல் விலை வீழ்ந்து விழும் வரை சாதாரணமாக உபயோகிக்கப்பட்டு வந்தது. சுதையச் சயனதை (Calcium cyanide) யிலிருந்து நவச்சார வாய்வு இலேசாகப் பிரிந்து காலகமாக நெற்பயிருக்கு உதவுகிறது. உவரக்காலகை நெல்லுக்கவ்வளவாகப் பயன்படுவதில்லை.

செயற்கை உரங்கள்: அம்மோபோசு (Ammophos), லூனோபோசு (Leunophos), நிசிபோசு (Niciphos) இந்த மூன்று உரங்களும் பெயர் வெவ்வேறாக இருந்த போதிலும் ஒரே மாதிரியான உரங்களேயாகும். இவற்றில் காலகமும் எரிகக்காடியும் கலந்திருக்கின்றன. ஆனால், இவை சிலவற்றில் சமமாகவும் மற்றவற்றில் காலகம் ஒரு பங்கிற்கு எரிகக்காடி இரண்டு மூன்று பங்காகவுமிருக்கும். இவை மத்திய மாகாணம், ஐக்கிய மாகாணம், பர்மா முதலிய மாகாணங்களில் நெற்பயிருக்குச் சிபார்சு செய்யப்படுகிறது. இவை நாற்றங்காலுக்கு நல்ல உரமாகும்.

கனிய உரங்கள் தனியாக அனேகமாக நல்ல பலன் தரக்கூடியதில்லை. கரிம உரங்களோடு உபயோகிப்பதென்றாலே நல்ல பலன் கொடுக்கும்.

(முற்றிற்று.)

---

வாழ்க்கையின் மனோகரம் வெறும் தோற்றங்களே! அது வந்துகொண்டும் போய்க்கொண்டும்இருந்து பிறகு மறைந்துவிடும். ஆதலின் வாழ்க்கையில் என்றும் அழியா வான்புகழ் தேடவேண்டும்.

உன் மனமே ஒரு பெரிய தொழிற்சாலை. அதில் உண்டாகும் எண்ணங்களே உலகத்திற்குப் பயன்படும் சரக்குகள். ஆதலின் நல்ல எண்ணங்களையே நீ நாடுதல் வேண்டும்.

# கூட்டுறவு, கைத்தறி நெசவுகாரரைக் கைதூக்கி விடுமா?

கூட்டுறவினாலும் விமோசனம் பிறக்காதென்றால், கிராமாந்தர இந்தியாவின் நிலைமை என்றைக்கேனும் திருந்தக் கூடுமென்று நம்புவதற்கும் இடமில்லாது போய்விடும்; (If co-operation fails, there would fail the best hope of Rural India) என்று முன்னர் விவசாய விசாரணைக் கழகம் கூறிய உண்மை விவசாயத்திற்கு மட்டுமல்ல, நெசவுக்கும் பொருந்தும்.

நன்மையினால் தீமையையும் அன்பினால் பகைமையையும் வெல்லக் கூடுமென்றால், உறவினால் இவ்வுலகில் சாத்தியமாகாத காரியம் ஏதேனும் இருக்கவும் கூடுமா? இருக்காது. ஆனால், உண்மை உறவை நாம் காணவேண்டுமே! அதனைக் கூட்டாகப் பயன்படுத்த வேண்டுமே! அவைதான் நம்மாலாவதில்லை.

உழவு ஒரு சிக்கலான தொழிலென்றால், நெசவை அதனிலும் சிக்கலான தொழிலென்றே சொல்லவேண்டும். நெசவின் சிக்கலை மட்டும் நீக்கினால் போதாது; நெசவுகாரரின் குறைகளுக்கும் மாற்றுத் தேடியாகவேண்டும்; உழவும் பிற தொழில்களும் மிகுந்த மிச்சந் தரும் தொழில்களாக நடை பெற்றுவரவும் வேண்டும். அப்படியானால்தான், நெசவுகாரர்களின் துணிகளை வாங்கப் பிறரிடம் பணமும் காணமுடியும். இந்தக் காலம் உனக்கு வலித்தால் எனக்கென்ன வென்று இருக்கக்கூடிய காலமல்ல. இன்றைக்கு உழவருக்கு வலித்தால், நாளை அந்த வலி நெசவாளர்களையும் தாக்காது போகாது. ஆகவே, நாம் எம்முயற்சியில் ஈடுபடினும் எல்லாரும் செம்மையாக வாழ வேண்டும் என்ற கருத்துடன் அதற்காவனவே செய்ய வேண்டும்.

நம் மாகாணம், கைத்தறி எண்ணிக்கையில் இரண்டாவதாக வரினும் நெசவாளர்கள் எண்ணிக்கையில் முதலிடம் பெற்றிருக்கிறது. நம் மாகாணச் சனத்தொகையில் பதினைந்து சதம்வரை நெசவாளர்களாக இருக்கக்கூடும். இவ்வளவு பெருந் தொகுதியினரின் வேலையில்லாத் திண்டாட்டம், பிறரையும் சீரழிக்காது விடாது. அதனை உத்தேசித்தேனும், அரசாங்கமும் பிறரும் அவர்களுக்குதவிவர வேண்டும்.

கைத்தறி நெசவுகாரருக்கு, வெளி நாட்டு ஆலைப்போட்டியும் சில மாதங்களாகவே நின்றிருக்கிறது; வடநாட்டாலைகள் இப்பொழுது சண்டைக்கான துணிகள் நெய்தலிலீடுபட்டிருப்பதால், அவற்றின் போட்டியும் தற்காலிகமாக மறைந்திருக்கிறது. என்றாலும், இந்தச் சண்டை முடிவதற்குள், சட்ட திட்டங்களால் அவற்றின் போட்டியை யொழித்துக் கொண்டாலன்றி, அவற்றோடு நெசவாளர்களால் போட்டி போட்டுக்கொள்ள முடியாது. ஆலை நெசவு கூலி அடிக்கு அரையணா ஆகுமென்றால், கைத்தறி நெசவு கூலி இரண்டரையணாவுக்கு மேலுமாகும். ஆலைகள் அடக்க விலைநூலைத் துணியாக நெய்தால், நெசவாளர்கள் அதற்கு இலாபமும் வண்டிச் சத்தமும் கொடுத்து வாங்கி நெய்ய வேண்டியவர்களாயிருக்கிறார்கள். இப்படியாக, ஆலைத்துணிகள் விலை சௌக்கியமாக அமையக்கூடியதோடு நன்றாகப் பாடம் பண்ணப்பட்டு மெதுவாகவும் பளபளப்பாகவுமிருக்கின்றன. ஆகையால், அரசாங்க ஆதரவிருந்தாலன்றிக்கைத்தறிநெசவுகாரர்கள் தங்கள் தொழிலை விட்டுப் போகவேண்டியதே வரும். நெசவுப்புள்ளி விபரங்கள் தெரிவதற்காக நியமித்திருக்கும் கழகமும் (Fact finding Committee,) இந்தக் கழக நியமனத்திற்கு, ஒருவகையாக நாமும் மூலகாரணமாவோம். ப-ர்.) நெசவாளர்க்கனுசரணையாகப் பல சிபார்சுகள் செய்யக்கூடும். என்றாலும், ஆலை முதலாளிகளின் செல்வாக்குக்கும் அமைப்புக்கும் நம்மாசாங்கம் கட்டுப்பட்டதாய் ஆலைத் தொழில்களுக்குப் பாதகமில்லாத

அளவிற்கே சிறு தொழில்களையும் குடிசைத் தொழில்களையும் ஆதரிக்கலாம் என்றிருக்கிறது. அக்கொள்கையை மாற்றிச் சிறு தொழில்களுக்கும் குடிசைத் தொழில்களுக்கும் பாதகமில்லாத அளவிற்கே ஆலைத் தொழில்களுக்கு ஆதரவளிப்பதென்றாக வேண்டும். அப்படி மாற்றிக் கொள்ளாதவரை, ஆலை முதலாளிகள் தாட்சண்ணியத்திற்குக் கட்டுப்பட்டு, அடிக்கடி கைத்தறி நெசவை அனுதரவு செய்ய நேரும்.

சாதாரணக் கைத்தறி நெசவுக்குக் கதர் நெசவும் போட்டியாகவே இருந்து வருகிறது. கதர் நெசவினால் நெசவாளர்கள் மிகுந்த பொறுமைசாலிகளாகி வருகிறார்களென்பதும் நூல் நூற்கும் ஏழைகளுக்குக் கொஞ்சம் கூலியும் நெய்பவருக்குக் கூடியவரை சுமாரான கூலியும் கிடைக்கிறதென்பதையுந் தவிர, காங்கிரசாட்சிக் காலத்திலும் கதர்த் துணிகள் அதிகமாகச் செலவானதில்லை. அவற்றின் கிரயத்தில் அபிமான வரியும் சேர்ந்தேயிருக்கிறது. கதர் வாங்குவதற்கு ஏழைகளிடம் போதிய பணமில்லாத நிலைமையில், அந்த இயக்கத்தை ஒரு சிலரே ஆதரித்து வரக்கூடும். அப்படி அவர்கள் முட்டுக் கொடுத்து வரும்வரை —காந்தியடிகள் காலம்வரைதான் அந்த இயக்கமும் நடைபெறக் கூடும். அப்படியில்லாது கொஞ்ச உதவியாலும் நீடித்தும் நிலைத்தும் நிற்கக் கூடிய சாதாரண கைத்தறி நெசவுக்குச் சுதேசிய உணர்ச்சி நல்ல பலன் தரக்கூடும். ஏகதேசம், நெசவுகாரர்களே அன்னியத் துணிகளை ஆலைத் துணிகளைக் கட்டித் திரிவதையும் நாம் பார்க்கலாம். அப்படி அவர்கள் செய்து வருவார்களென்றால், அவர்கள் பிறர் ஆதரவை எதிர்பார்ப்பதும் நியாயமாகாது.

நெசவுகாரர்களைக் குடியும் சூதாட்டமும் பாழாக்கி வருவதையும் நாம் காணலாம். குறைந்த கூலிக்காக நீண்ட நேரம் வேலை செய்ய வேண்டியதாயிருக்கும் வரை, அவர்களுக்கு இளைப்பாறவும் வெளியுலகத்தோடு கலந்து கொள்ளவும் நேரமிராது காலையில் ஆறு மணிக்குக் குழியிலிறங்குகிறவர்கள் இரவில் பத்துமணிவரை, இடையில் இரண்டொரு அரைமணி நேரம் உணவிற்காக வெளியேறுவதைத் தவிர மற்றப்படி ஓயாது வேலை செய்து கொண்டிருப்பதால், அவர்கள் உடல்தான் களைத்துப் போகாதா? மனம் தான் சோர்ந்து விடாதா? இவற்றிற்கிடமில்லாது செய்து கொள்ளும்வரை, இவற்றிற்கு மாற்றாகக் குடியையும் சூதாட்டத்தையும் அவர்கள் தேடவேண்டியதாகவே யேற்படுகிறது. ஆகையினால், நெசவுகாரர்களின் பின் சந்ததியாரேனும் இக் கெட்ட பழக்கங்களில்லாதிருக்க வேண்டுமென்றால், குறைந்த நேரத்தில் அதிகமாய் நெய்து முடிக்கக்கூடிய கருவிகளையும் மின்சாரம் போன்ற விசைச் சத்திகளையும் பயன்படுத்தவும் வேண்டும். அப்படிச் செய்வதால், சரக்கும் நயமாக முடியக் கூடும்; சரசமான விலைக்கும் விற்கக்கூடும்; ஆலைப் போட்டிக்கும் அவ்வளவாக இடமிராது.

உடல் நலிவும் வெளியுலகப் பழக்கமின்மையும் இவற்றிலும் விசேடமாகக் கடனும் நெசவுகாரர்களைக் கோழைகளாக்கியு மிருக்கின்றன. அவர்களிடம் ஆண்மையையும் துணிவையும் காண்பது அரிதாக இருக்கிறது. ஆகையால், அவர்களுடைய கடன்களைத் தீர்ப்பதற்குத் தீவிரமான வேலைகள் செய்து தீர்த்தாலன்றி நாம் அவர்களை ஆட்களாக ஆண் சிங்கங்களாகக் காணமுடியாது.

நெசவாளர்கள் அனேகமாகத் தரகர்களுக்கும் வியாபாரிகளுக்குமே கடன்பட்டிருக்கிறார்கள். தரகர்களும் வியாபாரிகளும் வியாபாரப் பிரியமுள்ள காலத்திலும் குறைந்த கூலியே கொடுத்து அதிக வேலையை வாங்கிக் கொள்ளுகிறார்கள்; பிரியமில்லாத காலத்தில் கடன் கொடுத்து அவர்களைக் காப்பாற்றும் புண்ணியத்தைக் கட்டிக்கொள்ளுகிறார்கள். அவர்கள் நெய்யும் துணி விற்பனையில் கிடைக்கும் இலாபத்தில் பெரும் பாகம் தரகர்களையும் நட்டம் பூராவும் நேசவாளர்களையுமே சேருகின்றன. இப்படியாகத்தரகர்கள் வியாபாரிகளிடம் சேர்

திருக்கும் சொத்தும் நெசவாளர்களுக்குப் போதிய கூலி கொடாததினால் சேர்ந்து வந்தவையே யாகும். அதுவே நெசவாளர்களின் கடனுக்கு உண்மைக் காரணமுமாகும். தரகர்களும் வியாபாரிகளும் அனேகமாக நெசவாளர்களினத்தையே சேர்ந்தவர்களாக இருப்பதால், நெசவாளர்கள் தங்கள் கடனைத் திருப்பிக் கொடுக்கக் கூடிய அளவிற்குத் தாங்களாகவே குறைத்து வசூலித்துக் கொள்ளவும் செய்யலாம். அவர்களோடு தாங்களும் கூட்டுறவு சங்கங்களில் சேர்ந்து அவர்களுழைப்பால் கிடைக்கும் இலாபம் பூராவையும் அவர்களே யடைவதற்கும் உடனிருந்துதவலாம். இப்படியாகத் தரகர்களும் வியாபாரிகளும் நெசவாளர்களின் வரவை அதிகப் படுத்தவும் கடனை யொழிக்கவும் உதவ வேண்டும். அப்படி அவர்களே செய்வதற்கில்லை யென்றால், அரசாங்கம் வற்புறுத்தியேனும் கடனை ஒழித்திட வேண்டும். அரசாங்கம் அவ்வாறு செய்யத் தயங்கினால் தற்காலம் அவதிப்பட்டுக் கொண்டிருக்கும் நெசவாளர்கள் மீளவே முடியாது போகும்.

அரசாங்கமும் பிறர் பலரும், உதவவேண்டியதாயும் உதவக்கூடியதாயும் இருப்பதிலும் அதிகமாக, நெசவாளர்கள் தங்களுக்குத் தாங்களே உதவிக்கொள்ள வேண்டிய காரியங்கள் பல உண்டு. உண்மையும் நேர்மையும் அவர்களிடம் தாராளமாக நிலவ வேண்டும். அவர்களுக்காகக் கூட்டுறவு சங்கங்களில் உதவ வருகிறவர்கள் அவர்களுடைய கள்ளத்தனங்களை முதலாவதாகத் தெரிந்து கொள்ளவேண்டும் என்றிருப்பது அவர்களுடைய விருத்திக்குப் பெரிய இடையூறாகும்.

நெசவாளர்களின் வறுமையாலும் குறைகளாலும் இலாபமடைந்து கொண்டிருப்பவர்கள் இனத்தவரா யிருப்பினும் தங்கள் இலாபத்தையும் கருதாது அவர்கள் நன்மைக்காக உழைக்க முன் வருவது வெகு அரிய காரியம். அப்படி அவர்கள் முன் வருவார்களானால், அவர்களுடைய பணத்தாலும் திறமையாலும் அனுபவத்தாலும் நெசவாளர்களும் விரைவில் முன்னேறக் கூடும். அப்படி அவர்கள் உதவுவதற்கில்லை யென்றால், நெசவாளர்கள் தாமாக வேனும் முன்னேறுவதற்கு முயல வேண்டும். தங்கள் குற்றங்களையும் அகற்றி உண்மையையும் நேர்மையையும் பிறருக் குதவுவதையும் வளர்த்து வரவேண்டும். இவற்றிற் கெல்லாம் கூட்டுறவு சங்கம் போன்று வேறொன்று முதவக் கூடியதில்லை. ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு நெசவாளர் கூட்டுறவு சங்கமும் ஒவ்வொரு தாலுகாவிற்கும் அல்லது ஜில்லாவிற்கும் ஒரு மத்திய சங்கமும் அதே மாதிரியாக மாகாணச் சங்கமும் அகில இந்தியச் சங்கமும் அமையுமென்றால், தங்கள் குறைகளையும் அவற்றின் மூலம் நிவர்த்தித்துக் கொள்ளலாம்; தங்கள் தேவைகளையும் பூர்த்தி செய்து கொள்ளலாம். நெசவுத் தொழில் எப்பொழுதும் மிச்சம் தரும் தொழிலாக இருந்து வரும்படியாகவும் செய்து கொள்ளலாம். கடைவிலை நூல் விலை என்று ஏற்றத் தாழ்வாக நூல் விலை இருந்து வராமல் சௌக்கியமாகவும் ஒரே படித்தாயு மிருந்துவர ஏற்பாடு செய்து கொள்ளலாம். புதுப் புது மாதிரியாகவும் அழகாகவும் நெய்து தொழிலையும் விருத்தி செய்து கொள்ளலாம்; இலாபத்தையும் பெருக்கிக் கொள்ளலாம்; தொடர்ந்தும் வேலை செய்து வரலாம். இப்படியாக, உலகப் பெருமேதாவியாராகிய திருவள்ளுவர் தொழிலை ஏற்று நடத்திவரும் நெசவாளர்கள் தங்களைத் திருத்திக் கொள்ளவில்லை யென்றால், அவர்கள் தங்களுக்கு மட்டுமல்ல தமிழருக்கே பெரிய கேவலத்தைச் சம்பாதித்துக் கொடுத்தவர்களாவார்கள் என்று தான் வருந்தவேண்டியிருக்கிறது.

---

தன்னை ஆதரிப்பாரில்லாமல் பல துன்பங்களுக்கிடையில் ஒருவன் விடும் பெருமூச்சு அது கடவுள் வரைக்கும் எட்டும் வலிமையுள்ளது. ஆதலால் எப்பொழுதும் நீ ஏழைக்கிரங்கவேண்டும்.

6. கல்வி:

# ஆரம்பப் பள்ளிப் பாடத்திட்டக் குறிப்புக்கள்

(சாரம்) X

## பிரியப்பட்டால் படிக்கக் கூடிய பாடங்கள்

### வரைதல் (Drawing)

இயற்கைப் பாடம், சரித்திரம், பூகோளம் முதலிய பாடங்களிலும் வரைதலுக்கும் வர்ணமிடுதலுக்கும் மாதிரி செய்தலுக்கும் இடமுண்டு; கைத்தொழில் சம்பந்தமாகவும் வரைதலுக்கு இடமுண்டு. மற்றப்படி, வெறும் வரைதலுக்கிடமில்லை. இந்தக் காரணத்தால்தான் அதனைக் கட்டாயப் பாடமாகச் சேர்க்கவில்லை. சிருட்டிக்கலையாக அல்லது ஆக்க வேலையாகத்தான் அது பிரியப்பட்டால் படிக்கக்கூடும். ஆகையால், அதனைத் தனியாகப் படிப்பதற்கும் பிறபாடங்களோடு சேர்த்துப் படிப்பதற்குமுள்ள வித்தியாசத்தை ஆசிரியர் அறிந்து சொல்லி வைக்கவேண்டும்.

பிற பாடங்களோடு சம்பந்தப்படுத்திப் படிப்பதில், கதைகளை விளக்கவும் கருத்துக்களை வெளிப்படுத்தவும் வரைதலுதவும்; இயற்கைப் பாடம் பூகோளம் சம்பந்தமாகக் காண்கிறவற்றைப் பதிந்து வைக்கவுமுதவும். குழந்தைகள் தாங்கள் வரைவது சரியாக இருக்கவேண்டுமென்று அக்கறைகொள்ளுவதில்லை. கோணல் மாணலான கோடுகள் போடவும் எதேனும் வர்ணங்கள் பூசவும் செய்வார்கள். அவற்றைத் தங்கள் மனம்போலெல்லாம் மாற்றவும் விரும்புவார்கள். இந்தப் பருவத்தில் அவர்கள் வரைவது சரியாகவுமிருக்கவேண்டுமென்று வற்புறுத்தக்கூடாது. ஆனால், அவைபெல்லாம் வரவரச் சரியாகவும் பொருத்த மானதாகவும் ஆகக்கூடும். ஆரம்பத்தில் கண்டிப்புச் செய்யாமல் இயற்கையாக வரைந்துவர இடங்கொடுத்துவிட்டால், மேல் வகுப்புக்கு வருவதற்குள் சரியாக வந்துவிடும். பிரியப்பட்டால் படிக்கக்கூடியதாக வரைதலைப் படிக்கும் பொழுது அது மிகச் சரியாகவும் அமைந்துவிடக்கூடும். ஆனால், வரைதலை அதனளவிலேயே முடிவான வேலையாக்கிவிடாமல் மற்றும் ஆக்கமுயற்சிகளுக்குக் கருவியாக அதனை ஆக்கிக்கொள்ளவேண்டும்.

### அங்கிலம்.

மேல் வகுப்புப் படிக்கிறதற்காகவும் உபரிப் பாடமாகவும், ஆரம்பப் பள்ளிகளில் அங்கிலத்திற் கிடந்தரலாம். ஆரம்பப் பள்ளி சம்பந்தப்பட்ட அளவில், அதற்கிரண்டாவது இடமே யுண்டு; மற்றப் பாடங்களுக்குத் தடையாக அங்கிலப் படிப்பிருக்கவே கூடாது; மற்றப் பாடங்கள் குறைந்த ஓரளவேனும் படிப்பிக்காத பள்ளிகளில் அங்கிலம் கற்பிப்பதென்பது கூடாது. தாய் மொழியில் நல்ல தேர்ச்சியும் பிரதேச அல்லது இரண்டாவது மொழியில் ஒரு சுமாரான அளவு பயிற்சியும் பெறும்வரை அங்கிலம் கற்பிப்பதென்பது கூடாது. இவற்றை உத்தேசித்தே ஓரே மொழி கற்பிக்கும் பள்ளியில் நாலாவது வகுப்புக்கு முன்னும் இரண்டு மொழி கற்பிக்கும் பள்ளியில் ஐந்தாவது வகுப்புக்கு முன்னும் அங்கிலம் ஆரம்பிக்கக் கூடாதென்று சொல்லப்படுகிறது. எட்டாவது வகுப்பின் முடிவில் அங்கிலப் பயிற்சி உயர்தரப் பள்ளி இரண்டாவது பாரத்திற்கு ஒத்திருக்கவேண்டும். அங்கிலம் கற்பிப்பதனால் நேரமும் முயற்சியும் வீணாகக்கூடாதென்பதற்காக, உயர்தரப் போதனாமுறைப் பயிற்சி பெற்றவரே அங்கிலம் கற்பிக்கலாமென்று சொல்லப்படுகிறது.

### முதல் உதவி.

முதல் உதவி நித்திய வாழ்க்கைக்கும் மிகவும் பயன்படக்கூடியது; ஆனால், அதனைச் சாதாரண ஆசிரியர் சொல்லிவைக்கத் தகுந்தவரல்லர். ஆசிரியர் அதற்கெனத் தனிப் பயிற்சி

பெற்றிருக்கவேண்டும். அல்லது செஞ்சிலுவைச் சங்கம் முதலிய தகுதி பெற்ற சங்கத்தைச் சேர்ந்தவரால் கற்பிக்கப்படவேண்டும். ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் அதனைச் சொல்லிவைப்பது சாத்தியமாயிராததலால், அதனைப் பிரியப்பட்டால் பூராவாகவும் சொல்லிவைப்பதெனக் குறிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அதனுடைய அடிப்படையான தத்துவம் ஆட்சிமுறை சுகாதாரப் பாடங்களோடு சேர்க்கப்பட்டிருக்கிறது.

பிரதேச அல்லது இரண்டாவது மொழி.

முஸ்லீம் பள்ளிக்கூடங்களிலும் இரு மொழிப் பிரதேசங்களிலும் பிரதேச அல்லது இரண்டாவது மொழி அவற்றால் குறிக்கப்படும் நோக்கத்திற் கிணங்கப் பிரியப் பட்டால் படிக்கக்கூடிய பாடமாகும். மற்றப் பாடங்கள் கூடியவரை திருப்திகரமான நிலைமைக்கு வந்த பிறகுதான், அஃது ஆரம்பிக்கப்படவேண்டும். ஆனால், அங்கிலத்தைப் போல் பிந்தித் துவக்க வேண்டுமென்பதில்லை. குழந்தை எந்த வயதிலும் ஒரு மொழியைப் படித்துக் கொள்ளக்கூடுமென்றும் ஒரு மொழிக்கு மேல் படிப்பதனால், அதிகச் சிரம மேற்பட்டிடாதென்றும் இப்பொழுதும் கருதப்படுகிறது; இதற்கு மாறாகத் தெளிவான சாட்சியம் எதுவுமில்லை. இரண்டாவது மொழி சுற்றுப்புறத்தில் பழக்கத்திலிருக்குமாதலால், அங்கிலத்தைப் படிப்பதிலேற்படும் சிரமம் இரண்டாவது மொழியிலேற்படாது. சாதாரணப் பேச்சுப் பயிற்சியாலும் நடித்தலாலும் கதை வாசகங்கள், கதைப் புத்தகங்களாலும் இரண்டாவது மொழியில் அதிகத் தேர்ச்சியும் எளிதில் அடைந்திடலாம்.

(முற்றிற்று.)

---

7. குடிசைத் தொழில்: கைத் தொழில்

# ஊசி எப்படிச் செய்யப்படுகிறது?

ஒரு நீளமான உருக்குக் கம்பி, ஒரு சிறு ஊசியாக வருவதற்குள் 20 விதமான மாறுதல்களை அடைந்து தீரவேண்டும் என்பதை நீங்கள் அறிந்தால், அடபாவமே! இந்தக் கம்பி, ஊசியாக வருவதற்குள் இத்தனை பாடுபடவேண்டுமா என்று பரிதாபப் படுவீர்கள். ஊசி செய்யும் தொழிற் சாலைகளிலுள்ளவர்கள் முதலாவது, உருக்குகளிலெல்லாம் மிகவும் நேர்த்தியான உருக்குகளைத் தேர்ந்தெடுத்து, அதை நன்றாய்க் காய்ந்திருக்கும் பதத்தில் ஒரே நேரான உருக்குச் சலாகைகளாகச் செய்வார்கள். இப்படி நேரான சலாகைகளை (பட்டாக்கள்) ஒரு இயந்திரத்தின் உதவியால் மெல்லிய கம்பிகளாக இழுப்பார்கள். இப்படிக் கம்பிகளை அளவுப் படி சிறு சிறு துண்டுகளாக வேறொரு இயந்திரத்தில் வைத்து வெட்டுவார்கள். இப்படி அளவுப்படி வெட்டப்பட்ட உருக்குக் கம்பிதான், இரண்டு ஊசியாக வெளிவருகிறது.

ஊசியாகப் போகும் ஒவ்வொரு சிறு கம்பித்துண்டுக்கும் 'ஊசித்துண்டம்' என்று பெயர். அங்கிலத்தில் (Blanks wire lengths) இதனை, பிளாங்சென்பார்கள். இவ்வூசித்துண்டங்களைப் பின்பு உலையிலிட்டு மங்கல் சிவப்பு நிறமாகும்வரை பழுக்கக் காய்ச்சுவார்கள். இப்படிக் காய்ச்சப்பட்ட ஊசித்துண்டங்களைச் சூடு ஆறுவதற்குள் இருவளையங்களுக்கு மத்தியிலிட்டு, துண்டங்களெல்லாம் சரியான நேராகும் வரைக்கும் ஒரு உருக்குத்தகட்டில் அழுத்தித் தேய்ப்பார்கள். அப்பொழுது துண்டங்கள் எல்லாம் சரி நேராக இருக்கும்.

சரிகோரான இச்சிறு ஊசித்துண்டங்கள் எல்லாம் வேறொரு இயந்திரத்திற்குள் வந்து சேருகின்றன. இந்த இயந்திரத்திற்குப் பொருள் நிறை இயந்திரம் (Container) என்று பெயர். இதில் ஏராளமான ஊசிகளைப் பார்க்கலாம். இந்தப் பொருள் நிறை இயந்திரத்தில் சேரும் ஊசிகள் எல்லாம் வேகமாக ஓடிக்கொண்டிருக்கிற இயந்திரத்தில் இருக்கும் கல்லைச் சுற்றி வருகின்றன. அவ்வாறு கல்லைச் சுற்றி வருவதால் ஊசிகளின் இரு முனைகளும் நன்றாய்க் கூர்மையாகிவிடுகிறது. இப்பொழுது பார்த்தால் அந்த ஊசித்துண்டத்தின் இரு பக்கமும் கூர்மையாக இருக்கும். பின்பு மற்றும் ஓர் இயந்திரம் ஒவ்வொரு துண்டங்களின் நடுவில் இரு ஆழ்ந்த பள்ளங்கள் செய்கின்றன. பின்பு இந்த ஆழ்ந்த பள்ளங்களில் கூரிய துளை போடும் இயந்திரங்கள் துளை உண்டாக்குகின்றன. இந்தத் துளைகள் தான் ஊசிக்காதுகள். அப்புறம் இந்தத் துண்டத்தின் ஒரு மத்தியை ஓர் இயந்திரம் வெட்டி, ஒரு ஊசி ஒரு பக்கத்திலும், மற்ற ஊசி மற்றொரு பக்கத்திலும் விழுகின்றன.

இப்படி விழுந்த ஊசிகள் கெட்டியாய் இராமல் வளையக்கூடியதாய் இருக்கும். ஆகவே அவற்றை உலையிலிட்டுப் பழுக்கக் காய்ச்சி எண்ணெய்க்குள் போடுகிறார்கள். அதற்கப்புறமும் ஊசிகள் இன்னும் கெட்டியாவதற்கு ஒருவித நீல நிறம் உண்டாகும் வரைக்கும் பழுக்கக் காய்ச்சுவார்கள். இப்படிப் பழுக்கக் காய்ச்சப்பட்ட ஊசிகள் ஆறினதும் கெட்டியாகவும் உறுதியாகவும் ஆகின்றன. இவை இலேசாய் ஒடியமாட்டா.

இப்பொழுது இந்த ஊசிகள் யாவும் சுத்தம் செய்யப்படும். அது எப்படியென்றால் ஒருவிதத் தூள் கலந்த மண் போன்ற பொருள் பொருள் நிறை இயந்திரத்திலிருக்கும். அதற்குள் இவ் வூசிகளைப் பெரிய இருப்புருளைகள், தூளுடன் சேர்த்து அகற்றுகின்றன. அப்பொழுது தூள் இந்த ஊசிகளைப் பளபளப்பாக்கி விடுகின்றன. இப்பொழுது பார்த்தால் ஏறக்குறைய வெள்ளியைப் போலிருக்கும். ஆயிரம் ஆயிரம் ஊசிகள் பளபளப்பாகி, ஒவ்வொன்றின் காதுகளும் ஒரே வரிசையாக இருக்க, அவையனைத்தும் ஒரு மேசைமேல் கீழே வந்து விழுகின்றன.

இந்த ஊசிகளெல்லாம் பரிசோதனை செய்யப்பட்டு அதனதன் அளவுப்படி ஒழுங்காக அடுக்குகிறார்கள். அதன் பிறகு அந்த ஊசிகள் ரகப்படி காகிதங்களில் மடித்து, உலகத்திலுள்ள நானா தேசங்களுக்கும் அனுப்பப்படுகின்றன. அவற்றை நம் ஊர்க் கடைகளில் இன்றைக்கும் பார்க்கலாம்.

சிறுவர் அறிவுக் கதிர்.

---

8. சுகாதாரம்: குடும்ப வாழ்க்கை

## குழந்தைக்குக் கீழ்ப்படிதல் கற்பிப்பதெப்படி?

(Barbara Staunton)

கீழ்ப்படிந்தே தீரவேண்டும் என்று நாம் வற்புறுத்தும்பொழுது அதற்கெதிர்ப்பும் முறைப்பும் தோராமலிரா; அதற்கு மேல், நாம் கண்டியாமலுமிருக்க முடியாது; அந்தக் கண்டிப்பினின்றும் தப்புவதற்கு அந்தக் குழந்தை பொய் சொல்லவும் இலேசாக நம்மை ஏமாற்றவும் முயற்சிக்கும்; அதன் மனதும் அவற்றால் தளம்பிக்கொண்டேயிருக்கும்.

குழந்தைக்கு, அதற்குத் தோன்றியபடியெல்லாம் செய்வதற்கு இடந்தருவதும் அதன் வாழ்க்கையைத் தாறுமாறாகவே செய்யும்.

குழந்தை அகக்களிப்புடனே வளர்ந்து வர, அஃது ஓரளவிற்குக் கீழ்ப்படிந்தும் வர வேண்டும். அப்படிக் கீழ்ப்படிந்துவரப் பயிற்றுவதெப்படி?

முதலாவதாகப் பயிற்றுவிக்கத் துணிகிற மாதிரியே முக்கியமாகும். முதிபோன் ஒருவன் அடிக்கடி குழந்தையை அதைச் செய் இதைச் செய்யென்று ஏவுவது வெகு எளிதாகும். ஆனால், அதன் பயன் அனேகமாகக் குழந்தை முணுமுணுத்தலு மறுத்தலுமாகவே முடியும்.

அப்படிச் சங்கடம் குழந்தையிடம் திடீரென்று தோன்றுமென்றால், குழந்தையைப் பேணி வளர்க்க வேண்டியவர்கள் தங்கள் வேலையைச் சரியாகச் செய்யவில்லை யென்றே யேற்படும்.

எப்பொழுதும், ஏவல் கூடியவரை குறைவாக இருக்கவேண்டும். குழந்தையிடம் சமூக உணர்ச்சி தோன்றி வளர வளர நம் ஏவலும் அதிகமாகலாம். ஆனால், எக்காலத்திலும், நம் ஏவல் நல் வாழ்க்கைக்கு அவசியமானதாகவே யிருக்கவேண்டும்.

முதலாவதாகக் குழந்தையின் தாய் இன்னின்னவற்றின் பலாபலன் இன்னின்ன வாகுமென்பதை அறிந்திருக்கவேண்டும். வாழ்க்கைக்கு இன்றியமையாத ஏவலாக இன்னின்னவற்றைக் கருதலாமென்பதையும் அவள் தெளிந்திருக்கவேண்டும். அவற்றைத் திட்டமாக நிறைவேற்றி வைப்பதற்காகப் பிறவற்றில் தளர்த்தியும் இணங்கியும் போகவேண்டும்.

தனக்கு அக்கறையுள்ளவற்றையே முக்கியமாகக் கருதாது, ஒவ்வொன்றையும் இது குழந்தையின் உடல் நலத்திற் கவசியமா, இது பலரும் இன்புற்றிருப்பதற்கு அவசியமா, புரிவு தெரிந்த குழந்தை பற்றி, இது சமூக சம்பிரதாயத்திற் கவசியமா என்றும் கவனிக்க வேண்டும்.

அனேக வீடுகளில் குடும்பக் காரியங்களைப் பற்றிய திட்டமான ஏற்பாடுகளும் சாதாரணமாக இருக்கலாம். எவரும் தம் தம் உடைமையைப் பெரிதாகக் கருதி அதற்கெளிதாகவும் அடிமையாகலாம். குழந்தைகளுள்ள வீட்டில் புத்திசாலியான தாய் விலையுயர்ந்த பொருள்களைக் கூடியவரை மறைத்து வைப்பாள். தன் குழந்தைகள் தூங்கும்வரை அவர்களுக்குள் கலவரை இருக்கக் கூடாதென்றும் உறுதி கொண்டிருப்பாள்.

எதிர்பாராத விருந்தாளியொருவன் வீட்டுப் பண்டங்கள் குழம்பிக் கிடக்கும் ஓர் அறைக்குள் திடீரென்று நுழைந்தானென்றாலும், அந்தக் குடும்பம் அமரிக்கையாக இருப்பதைக் காண முடியும். அப்படிக்கில்லாது சிரிப்புகளையும் நகைகளையும் பற்றி அரட்டலும் பயமுறுத்தலுமாக இருந்துகொண்டிருக்குமாயின், குழந்தைகளை பொட்டி எந்த ஒரு காரியத்தில் நாம் தலையிடக்கூடாதோ, அந்தக் காரியமாகிய அவர்களுடைய விளையாட்டை உலைப்பதாக முடியும்.

தாய்மார் தங்கள் குழந்தைகள் பிறத்தியாருக்கு முன் நல்ல விதமாகத் தோன்ற வேண்டுமென்று விரும்புவதியல்பு. ஆனால், சாதாரணமாக அவர்கள் மிகவும் கேவலமாக நடந்துகொள்ளுகிறார்கள்.

குழந்தைகளும் அயலார் முன் பெருமை பாராட்ட விரும்புகிறார்கள். அப்படிச் சமையத்தில் தாய்க்குக் கோப முண்டாகும்படியாகவும் குறும்பாகவும் தாயை அலட்சியம் செய்து மகிழ்கிறார்கள். அப்படிச் சமையம், தாய்க்கும் குழந்தைக்கும் சங்கடமான சமையமாகும்.

பெற்றோராகிய நாம் அனேக சமையங்களில் நாம் கோரியதை முடித்துத் தீருவதே முக்கியமெனக் கருதுகிறோம். அதனை நிறைவேற்றுவதற்கு நாம் கைக்கொள்ளும் உபாயத்தை அத்துணை முக்கியமாகக் கருதுவதில்லை. நாம் ஒரு ஏவல் சொன்னால், அது நிறைவேற்றப்படுகிறதா வென்று பார்ப்பது ஒழுங்காகும்; என்றாலும், நாம் அதனை நிறைவேற்றத் துணியும் உபாயம் தவறாக இருக்குமாயின், அது பெருந்தன்மையாக நிறைவேறுவதும் சிரமப்படும். இங்கே, அந்த நேரமும்

வெகுவாக நமக்குத் துணையாகவும் இருக்கக் கூடும்; அல்லது நம் காரியத்தைப் பாழாக்கவும் கூடும்.

நாம், குழந்தையோடு எங்கேனும் வெளியே போகவேண்டியதிருந்தால், அப்படிப் போவ தற்குப் பத்து விநாடிகளுக்கு முன்னதாகவே தயாராயிருக்கவேண்டுமென்று சொல்லிவிட் டால், குழந்தையும் விளையாட்டை முடித்துக் கொண்டு தயாராக இருக்கும். விளையாட்டு முடியாமல் அரை குறையாக இருக்கும் பொழுது திடீரென்று அதனை இழுத்துக் கொண்டு போவதென்றால் தான், எடுத்த காரி யம் முடியவில்லையே யென்ற உணர்ச்சி குழந் தையைக் கீழ்ப்படியாதிருக்கவும் செய்கிறது. முன்னக்கூடியே தகவல் கொடுத்திருந்தால், அதனைக் குளிக்கப் படுத்துவதற்குமுன் இன் றைக்குத் தண்ணீர் சூடாக இருக்கிறதா வென்று பார் என்றும் அதனை ஏவலாம்.

அதனைக் குளிப்பாட்டிக்கொண்டிருக்கும் பொழுது, அதற்கொரு அசௌகரியமும் தோன்றாதபடி நாம் திறமையாகக் குளிப்பாட்டு வதும் அதற்குப் பிடிக்காமல் சந்தடி செய் யலாம். அப்பொழுது, அங்கே ஒரு ஊரில், ஒரு சின்னப் பையனிருந்தான்; அவன்......... என்று கதை சொல்லிக்கொண்டே குளிப் பாட்டிமுடிக்க வேண்டும்; உடையையும் போட வேண்டும். சும்மா இரு என்று அதட்டாமல் இப்படிச் செய்வதனால் நம்முடைய காரியமும் நிறைவேறிப்போகும். குழந்தையும் நம்மைத் தொந்தரவு பண்ணித் தன்னையும் சிரமப்படுத் திக்கொள்ளாதிருந்துவிடும்.

இப்படியாக வளரும் குழந்தை பழக்கத் தினாலேயே வாவரப் பொறுப்பை யுணர்ந்து வரும். ஆறேழு வயதாகவும் போய் முகங் கால் கழுவிக்கொண்டு வா, புறப்படத் தயாரா யிரு என்று சொன்னாலே போதும்; அது தானே செய்து கொள்ளும். தனக்கே இந்த உணர்ச்சி வரும் முன்னதாகக் குழந்தையை வற்புறுத்துவதால் தான் அந்தக் குழந்தை தன்னை நாம் தொந்தரவு செய்வதாகவும் அதி லிருந்து எப்படியாவது தப்பித்துக்கொள்ள வேண்டுமென்றும் பிரயத்தனம் செய்கிறது. நாமும் அதனைப் பிடிமுரண்டான குழந்தை யென்று வெறுக்கிறோம்.

தாயாரைத் திருப்தி பண்ணுவதற்காகச் செய்கிறதென்ற பழக்கமும் குழந்தைகளுக் குதவாது. அந்தப் பழக்கமும் தாயும் குழந் யும் வெகு சரசமாக இருந்து வரவேண்டிய தைக் கெடுத்து விடும்.

சமூக சம்பிரதாயத்தை அனுசரித்து நடக்க வேண்டுமென்ற யோசனை வயதாக ஆகத்தான் குழந்தைகளுக்குத் தோன்றும். அது நம் முடைய உபதேசத்தால் அதனைக் கற்றுக் கொள்ளக்கூடியதில்லை. பிறர் முன் மாதிரியி லிருந்தே அது அதனைக் கற்றுக்கொள்ளவேண் டும். அது சாத்தியமாவதற்கு, அதனைப் போன்ற புரிவு தெரிந்த பிள்ளைகளோடு சாதா ரணமாகப் பழகும் வயதும் அதற்கு வரவேண் டும். தன் வயதுப்பிள்ளைகள் செய்கிற மாதிரி யைப் பார்த்துச் செய்வது போல முதியோ ரைப் பார்த்துச் செய்யக்கூடியதில்லை. (ஆனால், முதியோரின் கெட்ட மாதிரியைப் பார்த்துக் குழந்தை சீக்கிரமாகவும் கெட்டுப் போகும். இதை அனுபவத்தில் கண்டும்வருகிறோம்.(ப—ர்.)

ஒரு குழந்தை பிற குழந்தைகளோடு சேர ஆரம்பித்ததும் சமூக சம்பிரதாயங்களில் அனேகம் வந்து விடும். பிறரைப் பார்த்து அவர் செய்கிறபடி செய்வது மனித சுபாவம். ஒவ்வொருவருக்கும் பிறருக்குத் திருப்தியாக நடந்துகொள்ள வேண்டுமென்ற ஆசையும் இயற்கையாக உண்டு. சமூகத்தை மீறி நடப் பவர்களின் துர்ப்பாக்கியத்திற்காக நாம் அனு தாபப்பட வேண்டும்; அவர்கள் குற்றங்குறை களுக்கு அவர்கள் பெற்றோர்களே காரணமா வார்கள்.

உண்பதிலும் உறங்குவதிலும் கீழ்ப்படி தல் மிகவும் முக்கியமாகும். அதனால் அவ்வ பற்றி அடிக்கடி போராட்டமும் நிகழும்.

...ணவைத் தாயார் வெகு முக்கியமாகக் கருது கிறதாகக் குழந்தை நினைக்கிறது. அதற்கு மீறு வதால், தன் திறமையைச் சோதித்துப் பார்க்கவும் விரும்புகிறது.

முதியோர் குழந்தையை நிரம்பவும் அடக்கி ஒடுக்குவதாக இருந்தால், இந்த உணவுக் கருவியைப் பிரயோகிக்கவும் அது விரும்பும்; பசியாயிருந்தாலும் சாதனை செய்யும்.

குழந்தையைக் கீழ்ப்படிந்து வரக் கற்பிப்பது அதன் ஒழுக்க அமைப்பின் (Character building) பெரும்பாகமாகும். என்றாலும், சிறு வயதில் அதனைக் கட்டுப்பாடாகக் கருதுவதற்கில்லாமல், நாடோறும் வழக்கமாகச் செய்துவர வேண்டிய காரியமாக அதனைச் செய்துவிட வேண்டும்.

உண்மையான கட்டுப் பாடெல்லாம், பிறரால் சமத்தப்படக் கூடியதில்லை; அதன் பெரும்பாகம் தாமாக ஏற்படுத்திக் கொள்வதாக இருக்க வேண்டும்.

நாம் கோருகிற முடிவைப் பல முறை நல்ல வார்த்தை சொல்லியோ அழுத்தமாகச் சொல்லியோ கண்டித்தோ பெற்றுவரலாம். ஆனால் அவற்றிற்காகக் கீழ்ப்படிந்து வரும் குழந்தையை அகக்களிப்புடன் காண்பது அரிதாகும். அகக்களிப்பே குழந்தையின் பிறப்புரிமை. (ஆதலால், அதனோடு கூடிய கீழ்ப்படிதலே நாம் விரும்பத்தக்கது. ப—ர்.)

The Social Welfare.

(குழந்தைகளைப் பேணி வளர்க்கும் முறை பற்றி, தமிழர் ஒவ்வொருவரும் படித்து வரவேண்டிய நல்வழிப் பத்திரிகை (ஆண்டுவரி ரூ. 3. Salisbury Park, Poona) யினின்றும் ஒரு கட்டுரை அடுத்த இதழில் தருவோம். ப-ர்.)

---

# ஆ. நாட்டுவைத்தியம் மிருகவாகடம் பாகமுறை வாழ்க்கைக் குறிப்புக்கள்

### அன்னாசிப் பழம்.

I 1. மேகவெட்டை வாந்திபித்த மீறவாம் மேனிபிடுந்
தாகமுமட் டாகும் தலைவலிபோம்—பாகமுறு
பூந்தாழை யின்பழத்தைப் பூரிப் புடன்புசிக்க
லாந்தாழ்வும் இல்லை யறி.

அகத்தியர் குணவாகடம்.

மேகவெட்டை, வாந்தி, பித்தம் மீறு; தாகம் மட்டாகும்; தலைவலி போம். பழத்தைப் பூரிப்புடன் புசிக்கலாம். தாழ்வில்லை.

2. அன்னாசிப் பழச் (Pine apple) சாறு இடுப்பு வலிக்கும் (Lumbago) அதனைப் போன்றவற்றிற்கும் சிறந்த மருந்தாகும். தண்ணீர் சேர்க்காது பிரியம் போல் சருக்கரையும் சேர்த்து நாளொன்றுக்கு மூன்று நான்கு தடவை வேளை ஒன்றுக்கு ஆறு முதல் எட்டு அவுணமாகக் (Ounce) குடித்து வந்தால், இரண்டு மூன்று நாட்களில் வலியைக் கேட்டு விடும்; ஐந்தாறு நாட்களில் அனேகமாகப் பூராவும் குணமாகி விடும். வலிவந்தவுடனே இத்தச் சாற்றைக் குடித்தால், வலியும் அதிகமாக வளராது.

Madras Journal of Agriculture.

II 1. கனிந்த பழங்களிலிருந்து பிழிந்தெடுக்கப் படும், சாறுகள், குழந்தைக்கு மிகச் சிறந்த உணவாகும். அவை குழந்தைக்குப் போதிய சத்தைக் கொடுப்பது மல்லாமல், அதற்கு மலக்கட்டும் சீதபேதியும் வராமல் தடுக்கும். ஆரஞ்சுச் சாறு உத்தமமானதால், அதனை நாள்தோறும் கொடுக்கலாம்; சாற்றைப் பிழிவதற்கு முன்னால் சில செக்கண்டு நேரம் அதனைக் கொதிக்கிற நீரில் அழுத்த வேண்டும். குழந்தைக்குப் பழச் சாற்றைப் பால் கொடுத்தவுடனே கொடுக்கக் கூடாது; அதனைக் கொடுக்கப் பால் கொடுத்து ஒரு மணி நேரமாவது ஆக வேண்டும்.

ஆரோக்கியமும் நீடித்த ஆயுளும்.

2. நம் வயிற்றுக்குள் சேருகிற நிருநாணயம் பொத்தான் ஊக்கு கோலி இவை

சிறியனவாகவும் கூரிய முனைகள் இல்லாதன வாகவும் இருந்தால், குடலுக்கு ஒரு கெடுதி யும் செய்யாமல் நான்கு நாட்களுக்குள் வெளியே வந்து விடும். ஆனால் இரண்டு அங் குலத்திற்கு மேல் நீளமான குண்டூசிகளும் வாய்திறந்த ஊக்குகளும் கூரிய ஆணிகளும் அனேகமாகக் குடலுக்குக் கேடு செய்யும்; ஆகையால், அவற்றை வயிற்றில் வைத்தே எடுத்து விடவேண்டும். கோழி எலும்புகளும் மீன் முள்ளுகளும் வயிற்றில் நுழைகிற வெளிப் பொருள்களுள் மிகச் சாதாரணமானவை. விலங்குகளுக்கு அவை உணவின் ஒரு பகுதி யாகும். மனிதருக்கோ அப்படியல்ல. எனி னும், அவை சாதாரணமாக ஒரு சேதமும் செய்வதில்லை. இதற்குக் காரணம், அவை வயிற்றில் பூரணமாகச் சீரணித்து விடுவதேயா கும். அகட்டு நீர் (Gastric Juice) கோழி எலும்பிலும் மீன் முள்ளிலுமுள்ள சுண்ணம் பைக் கரைத்து விடுவதினால், அவை மெதுவு கொடுத்து, நன்றாய்ச் சீரணமாய் விடுகின்றன.

நல்வழி.

III. சாதாரணமாகத் தின்னும் தீவ னத்தோடு மாடுகளுக்குச் சுதையமும் (Calcium) எரியமும் (Phosphorus) சேர்த்து வர வேண்டும். அவை அவற்றின் வளர்ச்சிக் கவசியமாக வேண்டியிருக்கின்றன. அவித்த எலும்பு மாவும் (Steamed bone meal) சுட்ட சிப்பிச் சுண்ணம்பும் (Shell lime) சம மாகச் சேர்த்துக் கொடுத்து வர வேண்டும். இரண்டும் எளிதாகவும் கிடைக்கக் கூடும்; அதி கக் கிரயமுமாகா. பதினெட்டு மாதம் வரை கன்றுகளுக்கு ஒரு அவுணம் சேர்த்து வர வேண்டும். பதினெட்டு முதல் இருபத்திநான்கு மாதம் வரைக்கும் பின் சினையாயிருக்கும் பொழுதும் ஒரு அவுணம் சேர்த்து வந்தாலும் போதும். பால் வற்றிய பசுவிற்கு இரண்ட வுணம் சேர்த்து வரவேண்டும். பால் கொடுத்து வரும் பசுவிற்குச் சாதாரணமாக இரண்டவுண மும் நாளொன்றுக்கு இருபது இராத்தலுக்கு மேல் பால் கொடுக்கு மென்றால், அரை அவு ணம் அதிகமாகவும் சேர்த்து வரவேண்டும். விதைக்காளைக்கு இரண்டவுணமும் மற்றக் காளைக்குச் சாதாரணமாக ஒரு அவுணமும் 1500 இராத்தல் எடைக்கு மேலிருந்தால் ஒன் றரை அவுணம் அதிகமாகச் சேர்த்தும் கொடுத்து வர வேண்டும். இரண்டொரு நாள் சேர்த்துப் பிறகு நிறுத்துவதால் பய னில்லை; நெடுகலும் சேர்த்து வர வேண்டும். நாளொன்றுக்கு மாடு ஒன்றுக்கு ஒரு பைசா விற்கு மேல் போகாது.

(Indian Farming) P. Venkataramiah.

---

9. கிராம முன்னேற்றம்: தேச முன்னேற்றம்

# நாட்டுப்புறப் பணப் புழக்கம்

(Sudhir Sen)

## I

நாட்டுப்புறப் பணப்புழக்கம் கிரமமான முறையில் இருந்து வருமென்றால், அது கிராம வாசிகளின் பொருளாதார விருத்திக்குப் பேருதவியாயிருக்கும். கடன் கிடைப்பதொன் றையே நாம் பெரிதாகக் கொள்ளக் கூடாது. நம் நாட்டு உழவரின் வரவு குறைவாக இருத்த லினால், அதிகக் கடன் பட்டிருக்கின்றனர்; அவர் அப்படிக் கடன் பட்டிருப்பதால், அவர் வாங்கும் கடனைக் காலாகாலத்தில் திரும்பக் கொடுத்துவிடக் கூடுமென்று நம்பவும் சிரமப் படுகிறது. அவரை அப்படி நம்புவதற்கில்லாத நிலைமையில், அவருக்குக் குறைந்த வட்டிக்குக் கடன் கிடைப்பதுமில்லை.

உயர்ந்த வட்டியே குறைந்த வரவிற்கொரு காரணமுமாகும்; அதனால், கடன் தீருவதற் கும் சிரமமேற்படுகிறது. உழவர் உயர்ந்த வட்டிக்குத் தம் விளைவின் பேரில் கடன் வாங்

லும் பொழுது நல்ல விலைக்கு அதனை விற்கவு முடிகிறதில்லை. இப்படியாக உயர்ந்த வட்டியால் கிடைக்கும் வரவும் குறைகிறது. வாங்கியிருக்கும் கடனுக்கு வட்டியும் அந்த வரவிலிருந்தே கொடுக்க முடிகிறதில்லை. இப்படி, உழவருக்கு இரண்டு வகையாகவும் கேடு விளைகிறது. இவ்வாறு, கடன் கிடைப்பதற்குள்ள சிரமமும் உயர்ந்த வட்டியும் உழவரின் அதிக விளைவிற்கும் வரவிற்கும் தடையாக நிற்பன.

உழவரின் வரவை அதிகப்படுத்தக்கூடிய வழிகளிலெல்லாம் பெருமுயற்சி செய்யாமல், குறைந்த வட்டிக்குக் கடன் கிடைப்பதற்கு மட்டும் செய்யும் முயற்சி அத்துணை நன்மை தரத்தக்கதல்ல. கடன் கிடைப்பதொன்றினால் சிறிதளவே பயனிருக்கக் கூடும். ஆனால், வரவை அதிகப்படுத்துவதற்காகச் செய்யும் பல முயற்சிகளோடு அதுவும் சேரும்பொழுது, அதன் அருமை புலனாகும்; அது மிகுந்த பயனும் தரும்.

அனேகமாக மறந்து போகிற, ஆனால் இந்தத் தெளிவான உண்மையை மனதில் வைத்துக்கொண்டு நம் நாட்டு உழவுத் தொழிலைப் பணம் எவ்வளவு நேருக்கு நேராக விருத்திசெய்யுமென்பதைக் கவனிப்போம்.

## II

நம் உழவுத் தேவையில் குறுகிய காலக் கடன் வேறு நீண்டகாலக் கடன் வேறு என்று பிரித்துப் பார்க்கும் பழக்கம் இதுவரையில்லை. உழவின் விருத்திக்காகத் தாங்கள் குறுகிய காலக்கடனையே பயன் படுத்தக் கூடுமென்பதை அனேகக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் உணராததே அவை உடைபட்டுப் போனதற்கு முக்கிய காரணமாகும். கூட்டுறவாளர்கள் தாங்கள் கூட்டுறவுச் சங்கத்தில் வாங்கிய கடனைத் தங்கள் முன் கடனின் வட்டிக்கும் அசலுக்கும் செலுத்தி வந்ததினாலேயே, கூட்டுறவுச் சங்கங்களில் பாக்கிதார்களின் எண்ணிக்கையும் பாக்கித் தொகையும் விண்ணுக்கு ஏறின; அதாவது, குறுகிய காலக் கடனாக வாங்கி, நீண்ட காலக் கடனைத் தீர்த்து வந்ததினாலேயே அப்படி [illegible]ால், நாம் முதலாவதாகச் செய்யவேண்டிய காரியம் குறுகிய காலக் கடனுக்கும் நீண்ட காலக் கடனுக்கும் அதற்கேற்ற அமைப்புக்களை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும்.

## III

நீண்டகாலக் கடன்கள் இருவகைக் காரியங்களுக்காக உழவருக்கு வேண்டியனவாகும். ஒன்று, தங்கள் கடன் பளுவைக் குறைத்துக் கொள்ள; இரண்டு, தண்ணீர்ப்பாசன சௌகரியங்களை அதிகப்படுத்திக் கொள்ளுவதின் மூலம் தங்கள் நிலங்களை நிரந்தரமாக விருத்தி செய்துகொள்ள.

கடன் பளுவைக் கழித்துக் கொள்ளுவதற்கு ஒரே ஒரு வழிதானுண்டு; கடன் பளு, கடன் வாங்கியவர் செலுத்தக்கூடிய அளவிற்குக் குறைய வேண்டும்; அந்தக் கடனைக் கொடுத்துத் தீர்ப்பதற்கான தாபனமும் அமைக்கப்பட வேண்டும். சமீபத்தில், இது காரியமாகச் செய்யப்பட்ட சட்டங்கள், கடனை அப்படித் தீர்ப்பதற்கான ஏற்பாடுகள் செய்யாததினால், சில புதுச்சங்கடங்களுக்கும் இடந்தந்து விட்டன.

## IV

நம் நாட்டில் ஒவ்வொருவருக்கும் கிடைக்கும் தனி நிலப்பரப்பின் சராசரி அளவு மிகவும் குறைவாக இருப்பதால், நாம் தீவிரமாகப் பயிரிட வேண்டியது அதிக அவசியமாகிறது. இது வரை, நிலத்தில் செலவழிந்துவரும் பணத்தைக் காட்டிலும் அதிகப் பணமும் செலவழிக்க வேண்டும். தனி மனிதர்களாகட்டும், பிரதேசச் சிறு தாபனங்களாகட்டும், அதிகப் பணம் செலவழிக்கக் கூடிய வேலைகளைச் செய்துகொள்ளக் கூடியதில்லை. ஆகையால், அரசாங்கமே தலையிட்டு இதனைச் செய்வதற்குதவ வேண்டும்.

## V

குறுகிய காலக்கடன் உழவருக்கு நிலங்களைச் சாகுபடி செய்வதற்காகவும் மாடு என்று

வாங்குவதற்காகவும் கூளைவடம் முதலியன வாங்குவதற்காகவும் வேண்டியிருக்கிறது. இப்படிக் கடனில் பெரும்பாகம் கொடுக்கல் வாங்கல் செய்கிறவர்களிடமிருந்தே பெற வேண்டியதிருக்கிறது. வட்டி அதிகமாகவும் அவர்களுக்குக் கொடுக்க வேண்டியதிருக்கிறது. சில சமையம் அவர்களே வியாபாரம் செய்கிறவர்களாக இருந்தால், விளைந்த மகசூலையும் அவர்களுக்கே விற்கவேண்டியதிருக்கிறது. சில சமையம் கடன் வாங்கும்போதே விலையும் பேசிக்கொள்ளப்படுகிறது. இப்படியாகக் கடன் வாங்கும் உழவருக்கு நல்ல விலையும் கிடைக்கிறதில்லை.

கடன் கொடுப்போரைக் குறை சொல்லுவதால் பயனில்லை. வேறு யாரும் கடன் கொடுப்பார் இல்லாததால்தான், உழவர் அவரிடம் போய்க் கடன் வாங்குகிறார். சமீப காலத்தில் செய்த சட்டங்கள் கொடுக்கல் வாங்கலைப் பெரிதும் பாதித்திருக்கின்றன. ஆனால், சட்டதிட்டங்களால் மட்டும் இப்பொழுதுள்ள கேடுகள் திருந்திவிடமாட்டா. வட்டி தாரணை இவ்வளவுக்கு மேல் இருக்கக் கூடாதென்று வரையறை செய்வதால் போக்கியமாய்க் கொடுக்கல் வாங்கல் செய்கிறவர்களுக்கு இடமில்லாது போகுமே யன்றி, உழவருக்கு அதனால் பிரயோசனமிராது. தற்சமையம் நாட்டுப்புறங்களில் கடன் கிடைக்காதிருப்பதற்கு இஃது ஒரு காரணமாகும்.

உழவரின் வரவை அதிகப்படுத்தாமல் அவருடைய கடன் பெறத்தகும் யோக்கியதையை எப்படி அதிகப்படுத்த முடியும்? ஆகவே, கடன் சம்பந்தமான சட்டங்கள் செய்வதோடு அவர்களுடைய வரவை அதிகப்படுத்துவதற்கான பெருமுயற்சிகளும் செய்யப்படவேண்டும்.

## VI

நிலத்தின் விளைவையே பொறுப்பாக வைத்துக் கடன் பெறக்கூடுமென்றால், இலேசாகவும் குறைந்த வட்டிக்கும் கடன் கிடைக்கக் கூடும். ஆனால் கடன், கொடுத்தோருக்குத் தகவல் கொடுத்தே மகசூலை அறுத்தடித்துக் கொண்டுபோகிற தென்றும் அப்படித் தகவல் கொடாமல் கொண்டு போனால் குற்றமாகுமென்று மிருந்தாலொழியத் தகவல் கொடுத்துக்கொண்டு போவார்களென்ற நிச்சயத்திற்கும் இடமிராது.

## VII

அறுவடையாகவும் எல்லாரும் விற்கிறதாக இருந்தால், அந்தச் சமையம் குறைந்த விலைக்கே போகும். அது சமையம் பணத்திற்குத் தேவை யிருப்பதால், கொஞ்ச காலம் வைத்திருந்து விற்கவும் முடிகிறதில்லை. கெட்டுப் போகாதபடி வைத்துக்கொண்டால் கடன் கொடுப்பாருங் கிடையாது. அதற்கான களஞ்சியங்களிருந்தால், அவற்றில் வைத்திருந்து விலை யேறவும் விற்கலாம். இந்திய மத்திய பாங்கு விசாரணைக் கழகம் சிபார்சு செய்திருக்கிறபடி, இருப்புப்பாதைக் கம்பெனிகள் தங்கள் நிலயங்களின் பக்கம் களஞ்சியங்கள் கட்டி வைத்தால், அவற்றில் நம் விளைவை வைத்து வருவதற்கு வாடகையும் அவை வசூலித்துக் கொள்ளக்கூடும். வியாபாரிகள் அதனை வாங்கி அப்படியே இருப்புப்பாதை வழியாகக் கொண்டுபோவதற்கும் சௌகரியமாக இருக்கும். சென்னை மாகாணத்தில் கடன் விற்பனைச் சங்கங்களுக்குக் கிடங்குகள் கட்டுவதற்குதவியிருப்பது போலவும் உதவி வரலாம். கிடங்குகள் எலிக்கிடந்தராதனவாகவும் தீக்கிரையாகாதனவாகவும் இருக்கவேண்டும். ஈரிப்பாலும் மழையாலும் சேதம் ஏற்படக்கூடியதாகவும் இருக்கக் கூடாது. இப்படியாகக் களஞ்சியங்களில் அல்லது கிடங்குகளில் நாம் கொண்டு வந்து வைப்போமென்றால் அப்படிக் களஞ்சியங்களை நடத்தி வரச் சட்ட திட்டங்களும் அமைத்து அந்தக் களஞ்சியங்களிலிருந்து நாம் இரசீதிலும் பெற்றுக்கொள்ளலாம். அந்த இரசீதைச் செலாவணியாகத் தக்க ஆதாரவாக வைத்துக் கடனும் பெற்றுக்கொள்ளலாம். அப்படிக் கடனும் கிடைக்கக்கூடிய பொழுது,

ரும் விளைவை நாம் அவசரமாக விற்க வேண்டியதும் வராது. பின், நாம் நல்ல விலைக்கு விற்று அந்த இலாபத்தையும் நாமே யடையலாம்.

## VIII

சில சமையம் ஒரு இடத்தில் விளைவு அதிகமாக இருக்கப் பிறிதோரிடத்தில் விளைவேயில்லாதும் போய் விடுகிறது. விளைந்த இடத்தில் அவ் விளைவு செலவாவதும் சிரமப்படுகிறது. விளையாத இடத்தில் விலை அதிகமாகி விடுவதால், வாங்குகிறவர்கள் சிரமப்படுகின்றனர். இப்படியான பல இடங்களுக்கும் பொதுவான தாபனமிருந்தால், சிரமத்தைக் குறைத்துக்கொள்ளச் சௌகரியமுண்டு.

தபாலாபீசு பாங்கும் நாட்டுப்புறப் பணத்தைப் பட்டினங்களுக்கே கொண்டுபோய்ச் சேர்க்கிறது; மற்ற பாங்குகளும் கல்கத்தா பாம்பே போன்ற பட்டினங்களுக்கே பணத்தையெல்லாம் கொண்டுபோய்ச் சேர்க்கின்றன. (இப்படியாக இருக்கும் வரை சில்லறையாகச் சேரும் பல மிச்சங்களும் சில முதலாளிகளுக்கே உதவுவதாகமுடியும். அப்படிக்கில்லாது கூட்டுறவு பாங்குகள் போலப் பட்டினங்களில் சேரும் பணத்தையும் கிராமங்களிலேயே செலவிடுகிறதாக இருந்தால்தான் பலரும் பணத்தின் பயனையடையலாம். வேறு பாங்குகளே யில்லாமல், எல்லாம் கூட்டுறவு பாங்குகளாகவேயிருக்குமென்றால், நாட்டுப்புறத்தைப் பிடித்தலைக்கும் வறுமையும் விரைவிலொழிந்துவிடும். ப—ர்.)

## IX

கிராமங்களுக்குக் குறுகிய காலக் கடன் மட்டும் போதாது. நீண்ட காலக் கடனும் வேண்டும். நிலங்களை விருத்தி செய்வதற்கு நீண்டகாலக் கடனில்லாமல் தீராது. நீண்டகாலக் கடனுக்குக் கொஞ்சம் வட்டி அதிகமாகக் கொடுக்கவேண்டியதிருந்தாலும் பரவாயில்லை. அதில் நட்டம் ஏற்பட்டுவிடாது.

நீண்டகாலக் கடன் அரசாங்கமே வாங்கிக் கூட்டுறவு சங்கங்களின் மூலம் நமக்குதவ வேண்டும். வேறு வழியாக மத்திய பாங்குகளிலிருந்து நாம் பணம் பெறக்கூடுமானால், அதுவும் நல்ல ஏற்பாடாகும். நமக்குக் கடன் சௌக்கியமாகக் கிடைக்கவேண்டும்; தாராளமாகவும் கிடைக்கவேண்டும். சீமையில் வியாபார பாங்குகளின் கிளைகள் கிராமங்களிலும் வேலை செய்து வருகின்றன. விபசாய உண்டியல்கள் நம் நாட்டிலும் பரவவேண்டும்; அப்படிப் பரவினால்தான் விபசாய வேலைகளுக்கு வேண்டிய கடன்கள் நமக்குச் சௌக்கியமாகக் கிடைக்கத் தோதாக இருக்கும்.

## X

இந்தியப் பாதுகாப்புப் பாங்குச் சட்டம் (Reserve Bank of India Act) விபசாயத்திற்கு வேண்டிய உதவி செய்யவேண்டுமென்றும் சொல்லுகிறது. ஆனால், அதற்கேற்ற களஞ்சியங்கள் இருந்தால்தான் அந்த உதவியைப் பெற முடியும். இரண்டு மூன்று ஒப்பங்களின்பேரிலும் கடன் தரலாமென்றிருந்தபோதிலும் அந்த ஒப்பங்கள், நல்ல ஒப்பங்களாக இருக்கவேண்டுமாதலால் கூட்டுறவு ஒப்பங்களை ஒப்புக்கொள்ள அந்தப்பாங்கு மறுக்கிறது; கூட்டுறவியக்கம் திருந்தினால்தான் உதவக்கூடுமென்கிறது; ஆனால், பாங்கு இப்படியாக உதவினால்தான், கூட்டுறவியக்கம் திருந்தக்கூடும். நம் நாட்டில் சில மாகாணக் கூட்டுறவு பாங்குகள் நல்ல நிலைமையிலுமிருக்கின்றன. அவைகளின் ஒப்பங்களின் மேலாகிலும் அந்தப் பாங்கு கடன் தரலாம்.

(சாரம்.) Modern Review.

---

இன்றைக்கு நீ முடிக்க முயலும் ஒரு நல்ல காரியம் நாளைக்கு முடிக்கலாம் என நினையாதே. ஆயுளின் ஒவ்வொரு நிமிடமும் உனக்குக் கடவுளால் அளிக்கப்பட்ட ஒவ்வொரு வெகுமதியல்லவா!

10. கதை: சரித்திரம்

# காணமற்போன முத்தாரம்

(V. P. Cardozo)

மர மடர்ந்த ஒரு காட்டிற்கருகில் ஓர் ஊரிருந்தது. அங்கு இராமன் இலக்குமணன் என்னும் இரு இரட்டைப் பிள்ளைகள் தம் பெற்றோருடன் வசித்து வந்தனர். அவர்கள் வீட்டைச் சுற்றிலும் நிழல் தரும் மரங்கள் ஏராளமாக இருந்தன. மற்றப் பிள்ளைகளும், இந்த இரட்டைப் பிள்ளைகளுடன், சேர்ந்து மரத்து நிழலிலிருந்து விளையாடுவார்கள்.

அவர்கள் தாயார் பொன்னம்மாள், துணிகளைத் துவைத்துக் காயப் போடுகையில் ஒன்று தவறிக் கீழே விழுந்து அழுக்கடைந்து போயிற்று. மறு படியும் துவைக்க வேண்டியதாயிருந்தது. வெய்யிலோ அதிகம்; களைப்பும் அதிகம்.

வெயர்வையைத் துடைக்க முன் தாவணியை எடுத்த போது தன் கழுத்திலிருந்த முத்தாரத்தைக் காணமல் மதிமயங்கி நின்றனள். சீலையின் மடிப்புகளை உதறிப் பார்த்தாள். அதைக் காணேம். "முத்தாரம் போயிற்றே என்ன செய்வேன்! எங்கு வைத்தேன்! எங்குத் தேடுவேன்! இப்பொழுது கழுத்திலிருந்தது காணமற் போன மாயமென்ன!" எனப் புலம்பினள்.

பொன்னம்மாளின் மாமனர் அவளுக்குக் கொடுத்தது அந்த முத்தாரம். வயலில் விளைச்சலில்லாத காலத்தில், அதன் பலனை வரும் பஞ்சம் பசி மிகுந்த காலத்தில் உதவும் என்று வைத்திருந்த அந்த நகை காணமற்போன வருத்தம் தாங்கக் கூடியதா யிருக்கவில்லை.

"வியாதி வந்த வேளையில் உதவும் நகையல்லவா! கஷ்டம் மேலிடும் போது நம் பிக்கை தரும் நகையல்லவா! பஞ்சம் உண்டாகில், பணந்தரும் நகையல்லவா!" என்று பலவாருகப் புலம்பினள்.

"இராமா! இலக்குமணு! ஓடி வாருங்கள். என்னுடைய முத்தாரத்தைக் கண்டீர்களா? அதைக் காணேமே! வைத்த இடமும் தெரியவில்லையே! என்னேடு சேர்ந்து அதைத் தேட மாட்டீர்களா?" எனக் கேட்டுக்கொண்டே அதைத் தேடினள்.

அம் மூவரும் சேர்ந்து மூலைக்கு மூலை போய்த்தேட ஆரம் பித்தனர். பெட்டிகளுக்குள்ளே மேசைகளுக்குக் கீழே தேடியும் காணேம்.

தந்தை அன்றிரவு வந்த பிறகு தாயார் அக்காரியத்தைப் பற்றி அவருக்குச் சொன்ன பொழுது, அவர் அதைப் பற்றி அசாக்கிரதையாக இருந்தார்; "அது எங்கே போகும்! இங்கு தானிருக்கும்! இன்றைக் கில்லா விட்டால், என்றைக்காவது கிடைக்கும்!" என்று தைரியப் படுத்தினர்.

மறுநாள் குடும்பத்தாரனைவருக்கும் மகா விசனம். கழுத்து நகையும் காணமற் போயிற்று. கையில் ஒரு காசு மில்லை. "வாரம் ஒன்றிற்கு இரண்டணு அல்லது மூன்றணு வீதம் சேர்த்து வைத்தால் மட்டும் அவசரச் செலவுக்கு ஒரு காலம் உதவும்" என்று தாயார் சொல்லி, மரத்திலிருந்து உதிரும் காய்ந்த சருகெல்லாம் சேர்த்து வைத்தால் அதுவும் உதவும் என்று எண்ணினவளாய் "இராமா! உதிர்ந்த காய்ந்த இலைகளைப் பெருக்கிச் சேர்த்துக் குவிக்க மாட்டாயா?" என்று கேட்டாள்.

இராமனே பெருமூச் செறிந்து "நானு பெருக்க வேண்டும்? எனக்குத் தலையிடிக்கிறது. இலக்குமணன் செய்யட்டுமே! காலெல்லாம் புத்தகம் படித்துக்கொண்டு தானே யிருக்கிறன்?" என்றான்.

தாயார் இலக்குமணனைப் பார்த்து, "என்னருமை மைந்தா! இலக்குமணா! அதிக வேலையிருக்கிறபடியால் நீ எனக்கு உதவி செய்யமாட்டாயா?" என்றனள்.

"இராமன் சும்மா தானே இருக்கிறான்! அவனைச் செய்யச் சொல்லுங்கள். நான் பாடம் படித்துக் கொண்டிருக்கிறேனே!" என்று போக்குச் சாக்குச் சொல்லத் தொடங்கினான்.

"இது நல்ல பையன்களுக்கு அடையாளம் அல்ல! நானே என் வேலையை முடித்த பின் இதையும் செய்துகொள்ளுவேன். அப்பா வந்த பின் அவரிடம் சொல்லுவேன்" என்று பொன்னம்மாள் அவ்விருவரையும் பார்த்துச் சொன்னாள்.

இராமன் மரத்தடியில் விளையாடப் போனபொழுது ஒரு முள் அவன் காலில் ஆழமாய்த் தைத்தது. அவன் சத்தமிட்டழுதான். தாயார் ஓடிவந்து பார்த்து, "என்ன கெட்ட பையன்! பார்த்து நடக்க வேண்டாமா? இலக்குமணா! மருந்து கொண்டுவா" என்று சொல்லி இராமன் அழ அழ முள்ளைப் பிடுங்கி விட்டு மருந்து போட்டாள்.

பையன் அழுத சத்தம் கேட்டு அவ்வூரார் அனேகர் வேடிக்கை பார்க்க, அங்கு வந்து கூடினர். மருந்து கொண்டுவந்த இலக்குமணன் கல் இடறிக் கீழே விழுந்து கையிலுங் காலிலும் காயப்பட்டு இரத்தக் குறியுடன் காணப்பட்டான். இருவருக்கும் தாயார் அம்மருந்தைத் தடவிக் காயத்தைக் கட்டினாள்.

தாயாருக்குக் கோபம் அதிகம். அவள் சொன்னபடி கேட்டிருந்தால், பையன்களுக்கு ஆபத்து வந்திராது. தந்தை வீடுவந்து சேரும்வரை அவள் தன் மக்களை மரத்தடியில் உட்காரவைத்தாள். தந்தை அவர்கள் கீழ்ப்படியாமைக்குத் தகுந்த தண்டனை தருவார் என அனைவரும் எதிர்பார்த்திருந்தனர்.

மித்திரன் என்ற ஒரு சிறுவன் அந்தச் செத்தையைப் பார்த்து "நான் இதைப் பெருக்கிச் சுத்தம்பண்ணுவேன்! ஏனெனில், அவற்றிற்குக் கீழ் கல்லோ, முள்ளோ, தேளோ, பாம்போ மறைந்திருந்து தீங்கிழைக்கும். நானே இந்த இடத்தை நன்றாய்ப் பெருக்கிச் சுத்தம் பண்ணுவேன்" என்று சொல்லி அவ்விடத்தைப் பெருக்கிச் செத்தையை அப்புறப்படுத்தினான்.

"மித்திரன் பைத்தியக்காரனல்லவா? அவனை அதைச் செய்யச் சொன்னது யார்? அதுவும் நமக்கு நல்லதுதான்" என்று இரட்டைப் பிள்ளைகள் பேசிக்கொண்டனர்.

மித்திரன் வேலையை முடிக்கும்போது செத்தைக்கூடே ஒரு முத்தாரம் மின்னிக் கொண்டிருந்தது. "முத்தாரம், முத்தாரம்" எனச் சத்தமிட்டான். பையன்களும் தாயாரும் ஓடிவந்து பார்த்தார்கள். தாயார் அம்முத்தாரம் காணமற்போன தன்னாபரணம் எனக் கண்டு மிகமகிழ்ந்து அப்படியே அதைக் கழுத்தில் அணிந்துகொண்டாள். அன்றிரவு, தந்தையும் தாயும் இதைப்பற்றிக் கலந்து பேசினார்கள். மறுநாள் மித்திரனை யழைத்து தங்கள் நன்றியைக் காட்டி அவனுக்கு நன்கொடை யொன்றளித்தனர். அதில் கோடி வத்திரமும், இரட்டைப் பிள்ளைகள் எட்டாவது பிறந்த நாளுக்கென்று வாங்கிவைத்திருந்த விளையாட்டுச் சாமான்களும் இருந்தன.

தந்தை தன் மைந்தரைப் பார்த்து, "இதுவே போதும்! இதைவிட வேறு நற்பாடம் கற்பிக்கமுடியாது. வேறு தண்டனையுங் கிடையாது. நீங்கள் எப்பொழுதும் நல்ல பையன்களாய், பிறருக்குதவி செய்கிற மக்களாய், பெரியோர் சொன்னபடி கேட்டு நடக்கும் பிள்ளைகளாய், சேவை செய்யத் தேவை எங்குளதென்று காத்துக்கொண்டிருக்கிறவர்களாய் வளரவேண்டுமென்று நான் விரும்புகிறேன்" என்று சொல்லிமுடித்தார்.

இக்கதையினால் பொது ஊழியத்தில் ஒரு மனிதன் அடைகிற புகழை விட வேறு எத்துறையிலேனும் இத்தகைப் புகழ் அடைய முடியாதென் றறிகிறோம். ப-ர்.)

வித்தியாதனம்.

## 11. செய்தித் திரட்டு :

### அ. விவசாய வியாபாரக் கைத்தொழிற் செய்திகள்

1. கலப்புப் பண்ணை: இந்திய விபசாய ஆராய்ச்சிக் கழகம் பாதிச் செலவும் ஐக்கிய மாகாண அரசாங்கம் பாதிச் செலவுமாகப் பொறுத்துக் கொள்ளுவதென்று ஐந்து வருடத் திட்டம் போட்டு ஐக்கிய மாகாணத்தில் கலப்புப் பண்ணை வேலை நடக்கிறது. மேல் ஜில்லாக்களில் பத்துப் பன்னிரண்டு ஏக்கர் ஒரு பண்ணையாகவும் கீழ் ஜில்லாக்களில் ஏழெட்டேக்கர் ஒரு பண்ணையாகவும் வேலை நடக்கிறது. ஒவ்வொரு தொகுதியிலும் இரண்டு கலப்புப் பண்ணைகளும் நாலு சாதாரணப் பண்ணைகளும் வேலை செய்யும். கலப்புப் பண்ணையில், சாதாரணப் பண்ணையில் வேலை செய்கிற மாதிரி வேலை செய்வதோடு ஒரு சோடிக் காளை மாடுகளுக்கும் இரண்டு பால் மாடுகளுக்கும் அவற்றின் கன்றுகளுக்கும் பின்னும் அத்தனைக் கன்றுகளுக்கும் ஜீவனம் கிடைக்கும்படியாகவும் பயிரிடப்படும். கிடைக்கும் பாலை விற்றுவிடப்படும். அந்த விற்று வரவு உழவரைச் சேரும். மாடுகள் அதிகமாகப் பண்ணையிலிருப்பதால் மாட்டுரமும் அதிகமாகக் கிடைக்கும் கலப்புப் பண்ணை வேலை செய்யும் சமுசாரிக்கு மாடுகள் வாங்கத் தக்காவிக் கடன் கொடுக்கப்படும்; அவற்றைக் காப்பாற்றவும் நிலத்தில் விருத்தியாகப் பாடுபடவும் பண உதவியும் செய்யப்படும். இந்தத் திட்டத்தை நடத்திவைக்கப் போகிற அதிகாரிகளுக்கு இப்படிக் கலப்புப் பண்ணை வெற்றிகரமாக நடந்து வரும் ஆக்கிராவுக்குச் சமீபத்திலுள்ள பிச்சுபுரிப் (Bichpuri) பண்ணையில் பயிற்சி கொடுத்துவரப்படுகிறது.

Indian Farming. C. Maya Das.

2. மாகாண நெசவாளர் கூட்டுறவு கைத்தறிச் சங்கம் மாகாண அரசாங்கத்தின் துணிகள் செலவாகும் இலாகாக்களாகிய சாதல்வார் (Stationary), காவல் (Police), மருத்துவம் (Hospital) முதலியவற்றிலிருந்தும் இந்தியப் பலசரக்குச் சாலையிலிருந்தும் (Indian Stores Depot) அங்கீகரிக்கப்பட்ட மாதிரித் துணிகள் பெற்றிருக்கிறது. அதே மாதிரியான துணிகள் நெய்தனுப்பும்படியாகச் சில குறிப்பிட்ட சங்கங்களுக்கு விவரங்கள் குறித்தும் எழுதியிருக்கிறது. அந்தச் சங்கங்கள் குறிப்பிட்ட மாதிரிப்படி நெய்தனுப்பக் கூடுமென்றால், அவற்றிற்கு ஏராளமாக வேலையும் கிடைக்கும்.

The Madras Journal of Co-operation.

3. நம் மாகாண அரசாங்கம் நூல் இருப்பை அவசியம் கணக்கிட்டு வரவேண்டுமெனக் கருதுகிறது. அதற்கனுசரணையாக இந்தியப் பாதுகாப்பு 116-வது விதியின்படி 400இராத்தலுக்கதிகமாகச் சொந்தத்திலாயினும் பிறரோடு கூட்டாகவாயினும் பிறர் காரியக்காரராகவாயினும் மற்றப்படிக்காயினும் தன் சுவாதீனத்தில் அல்லது ஆளுகையில் வைத்திருப்பவர்கள் அந்த உத்தரவு பிறந்த 26—12—41லிருந்து 10 தினங்களுக்குள்ளாக அந்தந்தத் தாலுகா தாசில்தார் மூலம் ஜில்லாக் கலக்டருக்கு உறுதிமொழியுடன் தெரிவிக்க வேண்டும். பின் ஒவ்வொரு மாதத்திலும் முதல் தெய்தியிலும் பதினைந்தாம் தெய்தியிலும் அப்படியே செய்து வரவேண்டும்; தவறினால், மூன்று வருடம் வரை, சிறைத்தண்டனை விதிக்கவோ அபராதம் போடவோ இரண்டும் செய்யவோ கூடும்.

The Madras Govt. Press Note, No. 201.

4. வங்காள அரசாங்கக் கைத்தொழிலாகா சில இளைஞருக்குச் சலவைச் சவர்க்காரம் (Washing Soap) செய்வதற்கு ஆறு மாதம் கற்றுக் கொடுக்கும். குடை செய்தலும் வார்த்தலும் ஒன்பது மாதம் கற்றுக்கொடுக்கும் என்று ஓர் அரசாங்க அறிக்கையிலிருந்து தெரிகிறது.

வர்த்தக ஊழியன்.

5. மைசூர் குடிசைத் தொழிற் கழகம் இருபத்தினுலு இடங்களில் கையால் காகிதம் செய்யும் வேலையை துவக்கத் தீர்மானித்திருக்கிறது.

வர்த்தக ஊழியன்.

## ஆ. கிராமப் புனருத்தாரண தலதாபனச் செய்திகள்

பம்பாய் அரசாங்கம் பின்னடைந்த வகுப்பினர்களிலும் மத்திய வகுப்பினர்களிலும் ஒரு நேர்மையான அளவேனும் நகராண்மைக் கழக எழுத்து வேலைக்கு நியமித்து வரவேண்டுமென்று நகராண்மைக் கழகங்களுக்கு உத்தரவு செய்திருக்கிறது. Bombay Information.

## இ. கூட்டுறவு கல்வி சுகாதாரச் செய்திகள்

G. O. Mis. No. 1922 Ed. பிராவிடண்ட் பண்டில் சேர்ந்துள்ளவர்கள் இறந்து போனாலும், அறுபது வயதாய்விட்டாலும், அல்லது டெரெக்டருக்குத் திருப்தியான காரணம் காட்டினாலும் அந்தப் பண்டிற்குரியவர்கள் அதனைப் பெற்றுக் கொள்ளலாம்.

## ஈ. கூட்டச் செய்திகள் : தீர்ப்புக்கள்

இந்திய விவசாய ஆராய்ச்சிக் கழகத்தின் (Imperial Council of Agricultural Research) நெல் உட்கழகம் சமீபத்தில் செய்துள்ள தீர்மானம் சென்ற பத்து வருடங்களாக இருந்துவரும் நெல்லின் சாகுபடியையும் விளைவையும் பொதுவாக விளைவு நாளுக்கு நாள் அதிகமாகிக்கொண்டு வரவேண்டியிருக்கக் குறைந்துவருவதையும் கவனிக்கும்படியும், விளைவைக் குறையாதபடி காத்துவரவேண்டிய தவசிய மென்பதையும் மாகாண சுதேச அரசாங்கங்களின் கவனத்திற்குக் கொண்டுவரும்படி சிபார்சு செய்கிறது. கீழே கண்ட ஏற்பாடுகள் மாகாண சுதேச அரசாங்கங்கள் செய்துவரவும் சிபார்சு செய்கிறது.

1. தற்சமையம் குளங்கள் கால்கள் முதலிய பாசனங்களில்லாத பிரதேசங்களில் காலாகாலத்தில் உதவக்கூடியதும் போதியதுமான அத்தகைய பாசனங்களை ஏற்படுத்தித் தரவேண்டும்.

2. உழவர்களுக்கு ஏராளமாகச் சௌக்கியமான விலையில் உரங்கள் முக்கியமாகப் பிண்ணாக்குக் கொடுத்து அதன் கிரயத்தை அறுவடைக்குப் பின் வசூலித்துக்கொள்ள வேண்டும்.

3. சுத்தமான விருத்தியான விதைகள் ஏராளமாகக் கொடுத்துதவ வேண்டும்.

4. நன்செய் நிலங்களில் நெல் சாகுபடிக்குப் பின் காணம் முதலிய பயறு வகைகள் போன்ற இணக்கமான கோடைப் பயிர்கள் சாகுபடி செய்யத் தூண்டவேண்டும்.

5. மற்றப் பயிர்கள் சாகுபடி செய்யுதிருக்கும் பரப்பில் கூடியவரை நெல் சாகுபடி செய்யும்படி உழவர்களைத் தூண்டவேண்டும்.

The Madras Journal of Co-operation.

# 12. அறிவுரைத் திரட்டு.

## அ. விவசாய வியாபாரக் கைத்தொழிற் குறிப்புக்கள்

1. குறைந்த மழையைக் கொண்டும் வேளாண்மை செய்வதெப்படி? :— குறைவாகவே மழை பெய்யினும், பெய்த மழை வீணாக ஓடிப்போகாதபடிக்கும் காற்றில் ஆவியாக மறைந்துவிடாதபடிக்கும் களைகளுக்கு இரையாகிவிடாதபடிக்கும் நிலத்திலேயே சேரும்படியாகச் செய்துகொண்டால், அந்த ஈரத்தை வைத்தும் பயிரிடலாம்; நல்ல விளைவையும் பெறலாம். அஃதெப்படிச் செய்யக்கூடுமென்று உழவர்கள் கேட்கக்கூடும். அந்த முறையைக் கீழே விளக்குவாம்.

1. நிலத்திலே விழுகிற மழைத் தண்ணீர் ஓடிப்போகாதபடி சுற்று வரம்புகளிருக்க வேண்டும்.

2. ஒவ்வொரு ஆண்டிலும் நிலத்தில் மூன்றிலொரு பாகமே அதுவும் நிலத்தின் சரிவுக்குக் குறுக்காக உழப்படவேண்டும். மழை காலத்தில் நான்கு தடவை பலுகடிக்கவும் வேண்டும். இந்த உழவும் பலுகடிப்பும், களையையும் பிடுங்கி யெறிந்துவிடும்.

3. ஏக்கருக்கு ஐந்து வண்டி நன்றாக மக்கின சாணியுரம் அடிக்க வேண்டும்; கலப்புரமாகச் சேர்த்துச் சாணியுரத்தை அதிகப்படுத்திக்கொள்ளலாம். பசுந்தாளுரப் பயிர்களும் அதில் பயிரிடலாம்.

4. ஏக்கருக்கு நாலு இராத்தல் விதைபாகத் தாருக்குத் தார் பதினெட்டங்குல இடைவிட்டு விதைப்புக் கருவியின் (Drill) மூலமாக நிலத்தின் சரிவுக்குக் குறுக்காக விதைக்க வேண்டும்.

5. மாதமொரு தடவையாவது பயிரிட்டிருக்கும் சோளத்திற்கு ஊடாக உழுது போட வேண்டும். அப்படி உழுவதால் மேலாகப் புழுதியாகும்; வெடிப்பிற் கிடமிராது; களையும் ஒழிந்துபோகும்; தரையும் ஈரத்தைக் காத்துக் கொள்ளும்.

Bombay Information.

2. பூதேவி (Mother Earth):—கொடுத்து வாங்குதல் என்ற எழுதாச் சட்டத்தை விவசாயிகள் மறந்து விடுகிறார்கள். அவர்கள் பூமிக்கு ஒன்றையும் கொடுக்காமல் பூமியிலிருந்து எப்போதும் மாசூல் பெற விரும்புகிறார்கள். இதனால் நிலங்கள் செழுமை இழந்து மாசூலும் குறைகிறது. சாதாரணமாகக் கிடைக்கக்கூடிய மாட்டுச் சாணமும் சேகரிக்கப்படாமல்சேதமாக்கப்படுகிறது. மாட்டுச் சாணத்தை உரமாகக் கொட்டினாலும், பயிரின் செழுமையான வளர்ச்சிக்கு அவசியமான அம்சங்கள் அதில் இல்லை.

எவ்வளவு செழிப்பான நிலமாயிருப்பினும், பிராணிகளின் பிரேதங்கள், மரஞ்செடிகொடிகள் ஆகிய இவை மக்கிப் போவதிலிருந்து எடுக்கப்படும் ஒரு வகை உரம், மிகவும் அவசியமாகும். இந்த உரம் செழுமையின் அறிகுறியென்று கூடச் சொல்லலாம். வெப்பப் பிரதேச மண்ணில் இந்த உரம் மிகச் சொற்பமாகவே யிருக்கிறது. ஆனால், பச்சை உரங்கள் மண்ணுக்குள் செலுத்தப் பட்டால் தான் முழுப்பலன் அளிக்கும்.

காற்றுப் புக முடியாத இறுகிய மண்ணில் எந்தப் பயிரும் வேர் போடமுடியாது. நிலத்தின் செழுமை ஒழுங்கான சாகுபடியைப் பொறுத்தது. நிலத்தை உழுது பரம்படித்தோ அல்லது மண் வெட்டியால் கொத்திக் கொடுத்தோ மண்ணை இளக்கமாக வைத்திருக்க வேண்டும்.

சாணம், மக்கிப்போன உரம் முதலிய வற்றிலும், பயிர்களுக்கு வேண்டிய உணவு போதிய அளவு கிடைக்கிறதில்லை. எனவே, தற்கால உர வியாபாரிகள், விவசாயிகளின் தேவைகளுக்குத் தகுந்த பல விதமான சிக்கனமான உரத்தினுசுகளைச் சேகரித்துத் தர வேண்டியவர்களா யிருக்கின்றனர். உரங்கள் இயற்கை செயற்கை என இருவகைப்படும். சாணம் மக்கிப்போன செடிகொடிகள் முதலியவை, இயற்கை உரங்கள். பூமியிலிருந்து தோண்டி யெடுத்துச் செயற்கையாக உற்பத்தி செய்யப்படுபவை, செயற்கை உரங்கள். இயற்கை உரங்கள்: மீன் உரம், எலும்புத்தூள், இரத்த உரம், கொம்புத்தூள், திமிங்கில உரம், நிலக்கடலைப் பிண்ணாக்கு, எண்ணெய்ப் பிண்ணாக்கு. செயற்கை உரங்கள்: நவச்சியக் கந்தகை (Sulphate of Ammonia), சுதையச் சயனதை (Calcium Cyanide), மேல் காடி எரிகை (Super Phosphate), சாம்பரக்காலகை (Potash Nitrate), மற்றும் சாம்பர உறுப்புக்கள் (Potash Salts கைநிட்சில் வினிட், மூரியட் ஆவ் பொட்டாஷ்) நிசி போஸ், தூக் பாஸ்பேட்ஸ், பேசிக் ஸ்லாக்.

பயிரின் விளைவுக்கு நீரகம் (Hydrogen), எரியக்காடி (Phosphoric Acid), சாம்பரம் (Potash) ஆகிய மூன்றும் தேவை. மேற்கூறிய உரங்களில் இந்த மூன்றும் அளவோடு கலந்திருக்கின்றன. வெவ்வேறு செடிகளுக்கு வெவ்வேறு உரங்கள் வேண்டும்.

கமத்தொழில் விளக்கம்.

3. கரும்புக் குரமிடுதல்:

1. கரிம உரங்களைக் (Organic Manures) கரும்பை நடுவதற்கு முன்னதா

[illegible], அவை சிதைந்து நிலத்தோடு மக்கிப் போகக்கூடியதாக இடவேண்டும்.

2. கரிமமில்லா (Inorganic Manures) உரங்களைக் கரும்பின் ஆரம்ப வளர்ச்சிக் காலத்திலேயே பிண்ணாக்குச் சேர்த்தோ சேராமலோ இடவேண்டும். அவற்றைக் கரும்பை நடுவதற்குச் சற்று முன்னாகவும் நட்டிய கரும்பின் முளை கிளம்பும் பொழுதும் அந்தமுளை நன்றாகப் பண்ணை வைத்துப் பக்கத்திலும் பல சிம்புகள் விடும் பொழுதும் இடலாம். சீக்கிரமாகப் பலன் தரக்கூடிய உரங்களைப் பண்ணை வைக்கும் பொழுதுதான் இடவேண்டும். கரிமமில்லா உரம் இரண்டு பங்கென்றால் அதனை மூன்று பங்கு பிண்ணாக்குப் பொடி அல்லது உலர்ந்த மண்ணோடு சேர்த்து, தண்ணீர் இறைப்பதற்கு முன்னாகவேனும் அல்லது இறைத்து முடிந்தவுடனேனும் கரும்புத் தூருக்குள் பொதிந்து வைக்க வேண்டும். பிறகு, அதனை நிலத்தோடுசேரும் படியாகக் கிளறியும் கொடுக்கவேண்டும்.

3. எண்ணெய்ப் பிண்ணாக்குகள்: எள்ளுப் பிண்ணாக்கு ஆமணக்கு முத்து வேப்பமுத்து நிலக்கடலைப் பிண்ணாக்கு இவற்றை நடுவதற்கு ஒரு மாதம் அல்லது ஆறு வாரத்திற்கு முன் நிலத்திலிட்டு புழுதியோடும் கலந்துவிடலாம். அவற்றைக் கரும்பு முளைக்கு முன்னும் முளைத்தவுடனுங்கூட இடலாம். இலுப்பைப் பிண்ணாக்கை அவ்விதமிடக் கூடாது. நடுவதற்கு இரண்டு அல்லது இரண்டரை மாதத்திற்கு முன்னதாகவே பள்ளம் (Trenches) தோண்டும்பொழுது இடவேண்டும். அதில் காலகம் (Nitrogen) குறைவாக இருப்பதால், மற்றப் பிண்ணாக்கைப் போல இரண்டரை மடங்கும் இட வேண்டும்.

கரும்பின் வளர்ச்சி ஆரம்பத்திலேயே, அது நிலத்திலுள்ள காலகத்தை எடுத்துக் கொள்ளுகிறது. பின் வளர வளர அப்படி எடுத்துக் கொள்ளுவதும் குறைந்து போகிறது. ஆகையால், கரும்புக்கு உரமிடுவதெல்லாம் வளர்ச்சி ஆரம்பத்திலேயே இருக்க வேண்டும். எப்படியும் பண்ணை வைப்பதற்கு முன்னே இட்டுத் தீரவேண்டும். ஒரு தடவையாக வைப்பதா இரண்டு தடவையாக வைப்பதா என்பதெல்லாம் நிலத்தின் வளத்தைப் பொறுத்தே யிருக்கிறது. முன்னதாகக் கரிம உரமிடப்பட் டிருக்குமானால், வேதி உரம் (Chemical Manure) பண்ணை வைக்கும் பொழுதுதான் இடவேண்டும். அப்பொழுது தான் பக்குவப்படும். அப்பொழுதுதான் அதற்கு அதிக உணவு தேவையா யிருக்கும். முளைக்கும் பொழுது வேண்டிய தேவையெல்லாம் அதற்கு நிலத்திலிருக்கும் கரிமப்பொருள்களிலிருந்து கிடைக்கும். முன்னதாக வேறு உரமிடாதிருந்து வேதி உரம் மட்டும் இடுவதாக இருந்தால், அதனை இரண்டு தடவையாக இடவேண்டும். முதல் தடவையாக நடும் பொழுது அல்லது முளை கிளம்பும்பொழுதும் கூடுமானால் நடும்பொழுதே இடவேண்டும். இரண்டாந் தடவையாக அதற்கு உணவு அதிகம் தேவையா யிருக்கிற பண்ணை வைக்கும் காலத்திலிட வேண்டும்.

(The Gur Market Review) K. K. Gupta.

4. கைத்தறி நெசவாளிகளின் பரிதாபகரமான நிலைமையினின்றும் அவர்களை ஈடேற்ற அரசாங்கம் சென்ற பன்னிரண்டு மாதங்களுக்கு மேலாகவும் முன் வாராதிருப்பது மிகுந்த துயரத்திற்கிடமாக இருக்கிறது. நூல் விலை 300 சதத்திற்கும் அதிகமாகக்கூடியிருக்கத் துணிவிலை 100 சதங்கூடக் கூடவில்லை. நூல் கிரயத்திற்குங் கூடத் துணியை விற்க முடியாதிருப்பதால், நெசவையும் விட்டு வேறு வேலையுமில்லாமல் சங்கடப்படுகிற நெசவாளிகளின் கூட்டம் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. நெசவாளிகளையும் சண்டைக்குப் பலியாக விட்டு விடுவது நியாயமல்ல. அரசாங்கம் பார்த்து அவர்களுக்குதவுவதென்றால், அதற்கத்துணை சிரமமுமல்ல. அதற்கு இந்தியப் பாதுகாப்பு விதிகளும் (Defence of India Rules) உதவும். கொஞ்ச காலத்திற்கு முன்னதாகக் கூட்டுறவிலாகா பஞ்சாலைகளிலிருந்து நூல்களை வாங்கி நெசவாளிகளுக்கு நேராக விற்பதற்கான ஏற்பாடும் செய்யப் போவதாகச் சில வதந்திகளும் உலாவி வந்தன. நெசவாளிகளின் சங்கடங்களை அரசாங்கம் தெரியாதிருப்பதாகவும் சொல்லுவதற்கில்லை. சனங்கள் படும் சங்கடங்களில் அரசாங்கத்திற்கனுதாபம் வேண்டாமா? முதலாவதாக, அதிகார வர்க்கத்தினரின் மனப்போக்கு மாற வேண்டும்.

Hindu.

(குதிரை தூக்கிப்போட்டது மல்லாமல் குழியும் பறித்த கதையாக, ஏழைகளுக்கு ஒரே ரகத் துணிகள் சௌக்கியமாகத் தரவேண்டு

மென நெசவாலைகளுடனும் இந்திய அரசாங்கம் ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறது. குறைந்த விலை ஒரே ரகத் துணியைக் கட்டித் திரிவதால், தங்கள் எளிமையைத் தாங்களே பறை சாற்றுவதாகும் என ஏழைகள் அதனை ஆதரிக்கக்கூடியதில்லை. நூல் நெசவாலைகளுக்குக் கிடைக்கும் விலைக்கு நெசவாளிகளுக்கும் கிடைக்குமென்றால், பல தினுசுத் துணிகள் சௌக்கியமாகவும் நெசவாளிகள் கொடுக்கக் கூடும். ஏழைகளுக்கிரங்கும் அரசாங்கம் அப்படியல்லவா ஏற்பாடு செய்யவேண்டும்?

அரசாங்கம் நெசவாளிகளுடைய சங்கட நிவாரணத்திற்காக ஒரு தனித் துணைத் தாசில்தாரையும் (Special Deputy Tashildar) அவருக்குதவியாகச் சில சிப்பந்திகளையும் நியமித்திருக்கிறது.

முன் சென்னை உயர்நீதிமன்றம் நீதிபதியாக இருந்த திவான் பகதூர் சுந்தரஞ் செட்டியாரைத் தலைவராகக்கொண்டு நெசவாளி நிவாரணச் சங்கம் ஒன்றும், சேலத்தில் நிறுவப்பட்டிருக்கிறது. அந்தச் சங்கமும் ரூ. 2000 வரை வசூல் செய்து குகை நெசவாளிகளுக்கு உதவியிருக்கிறது. நெசவாளிகள் நூல் நூற்று வரும்படியாகத் தூண்டப்பட்டிருக்கின்றனர்.

(கோயம்புத்தூர் ஆலைகளுடன் மாதம் 1000 பேலுக்கும், மதுரை ஆர்வியாலையுடன் 1000 பேலுக்கும் கூட்டுறவிலாகா ஒப்பந்தம் செய்திருப்பதாகவும் தெரிகிறது. ப—ர்.)

5. நிலத்தின் மேல் விழும் மழைத் தண்ணீர் திரண்டு ஓடும் பொழுது நிலத்தின் மேலாக இருக்கும் மண்ணையும் சத்தையும் அரித்துக்கொண்டு போகிறது. அப்படி மண்ணை அரித்துக்கொண்டு போகப்பட்ட இடம் பள்ளமாகிறது. அந்தப் பள்ளம் வருடத்திற்கு வருடம் பெரிதாகிறது. அதினின்றும் பல கிளைகளும் பிரிகின்றன. இப்படியாக, அந்த நிலம் அறுத்தும் பிடுங்கப்படுகிறது. அதனால், அது சாகுபடிக்கு இலாயக்கில்லாத தரிசாகவும் ஆகிறது. நிலம் அப்படிக் கெட்டுப்போகாதபடி கவனமாக உழவர்கள் வேண்டியன செய்து கொள்ளவேண்டும்.

செய்ய வேண்டிய காரியங்கள்:—

1. மழைத் தண்ணீர் ஓடுவதைத் தடுக்க நிலத்தைச் சுற்றிலும் சிறு சுற்று வரம்பு போடவேண்டும். நிலம் சரிவாக இருந்தால் ஒவ்வொரு மூன்றடிப் பள்ளத்தை யடுத்தும் அப்படிச் சிறுவரம்புகள் போட்டால் போதும்.

2. அறுத்துப் பிடுங்கிய பள்ளங்களை அவை பெரிதாகு முன் மூடி அவற்றிற்கு ஊடாகவும் வரம்புகள் போடவேண்டும்.

3. நிலத்தைக் கூடியவரை மட்டப் படுத்தி பல குண்டுகளாகப் பிரித்து வரம்புகள் போடவேண்டும்.

4. நிலத்தை யுழுவதெல்லாம் சரிவுக்குக் குறுக்காகச் சால் ஓட்டி உழவேண்டும். (கிழ மேல் சரிவாக இருந்தால் தென்வடலாக உழவேண்டும். கிழ மேலாக உழுதால், வெகுவாகவும் அறுத்துப் பிடுங்கிவிடும். கி.தூ- ப-ர்.)

5. சால்களுக்கு ஊடாக உள்ள பள்ளத்தில் பயிரிடுவதாக இருந்தால், மழைத் தண்ணீரை அந்தப் பயிரும் தரையும் உறிஞ்சிக் கொள்ளும்.

Bombay Information.

6. நம் நாட்டில் ஆமணக்குப் பயிராகும் பரப்பில் பேர் பாதிக்கு மேல் அதாவது எண்ணூற்று ஐம்பதாயிரம் ஏக்கர் ஐதராபாத்திலிருக்கிறது. ஆனால், ஐதராபாத்தின் விளைவு மொத்தத்தில் நாற்பது சதம் அதாவது அறுபத்தேழாயிரம் தன் (Ton) தானுகிறது. அதில் இருபத்து மூவாயிரம் தன் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகிறது. அப்போதைக்கப்போதைய விலைவாசிக்குத் தக்கதாக முப்பது இலட்ச ரூபா முதல் அறுபது இலட்ச ரூபா வரை ஏற்றுமதியாகும் முத்துக்காகக் கிடைக்கிறதென்றாலும், ஐதராபாத்தின் ஏக்கர் சராசரி விளைவு குறைவாகத்தானிருக்கிறது. நிலம் சத்துள்ளதாகவுமில்லை; அதிகமாக விளையக்கூடிய வித்துக்களை விதைப்பதுமில்லை; காலப்பிற்பாடாகவும் விதைக்கப்படுகிறது; விதைப்பிற்குப் பின் சரியாகக் கவனிப்பதில்லை. காலமேற்க விதைத்து நன்றாக உரமிடுவதாகவுமிருந்தால், விளைவும் அதிகமாகும். பூனாவிலிருந்தும் ஐதராபாத்தின் பல பாகங்களிலிருந்தும் 126 தினுசு வித்துக்களைப் பரிட்சித்துப் பார்த்ததில் நான்கு தினுசு வித்துக்கள் சிறந்தனவாகக் கண்டிருக்கின்றனர். அவை 626, 809, M 172, W 115 ஆகும். அவற்றில் M 172, இமாயத் சாகர் 1 என்றும் சொல்லப்படுகிறது. அது மற்ற வித்துக்களைக் காட்டிலும் அதிகமான விளைவையும் தருகிறது. அதில் எண்ணெய்யும் அதிகமாக இருக்கிறது.

இந்த வித்தை உழவர்கள் சாகுபடி செய்தால் ஏக்கருக்கு 6 முதல் 10 ரூபா வரை அதிகமாகக் கிடைக்கும்.

Hyderabad Information.

7. புன்செய்யில் கூழ்வரகு அறுவடையானவுடன் நிலத்தை யுழுது போடுவது நல்லது. அப்படிச் செய்வதால் தரைக்குக் கீழாக உள்ள ஈரிப்புக் காற்றிலேனும் வெய்யிலினாலேனும் உலர்ந்து போகாது பாதுகாக்கப்படும்; ஏப்ரல் மே மாதங்களில் பெய்யும் மழையை உறிஞ்சி ஏற்றுக்கொள்ளவும் தரை தயாராக இருக்கும்; மேல் தரை நன்றாக வெய்யிலாலும் மழையாலும் தாக்கப்பட்டுப் பதப்பட்டுமிருக்கும். அதனால், அது உரம் போட்டது போலவும் பலன் தரும்; களை வேர்களும் அற்றுப் போயிருக்கும்; பூச்சிகளின் முட்டைகளும் அழிந்து போகும். புன்செய்களுக்கு இந்த உழவு முக்கியம். மழையில்லாத ஆண்டுகளிலும் தண்ணீர்த் தட்டை ஒருவாறு தாங்குவதற்கு இது உதவும். அறுவடையானவுடன் நிலம் உழுவதற்குப் பதமாகவுமிருக்குமாதலால், அந்தச் சமயமே உழுவதும் நல்லது.

Mysore Information.

---

## ஆ. கிராம முன்னேற்ற தேசமுன்னேற்றக் குறிப்புக்கள்

1. நம் தேவையையே முக்கியமாகக் கொண்ட திட்டமில்லாதவரை, நாம் வாழப் போவதில்லை. நம் முக்கிய வாழ்க்கைத்தேவைகளை நாமே தேடிக்கொள்ளவேண்டும்; மற்றவற்றைப் பின் சேர்த்துக்கொள்ளலாம். அங்கில சாம்ராச்சியத்தோடு நம் கிராமப் பொருளாதார வாழ்க்கை இணைக்கப்பட்டிருப்பதில் திருப்திகொண்டிருக்கும்வரை, நமக்கு விமோசனம் கிடையாது. ஆலைகளையே நம்பியிருக்கும் கிராமவாசி அந்த ஆலைகள் வேறு வேலையிலீடுபடும்பொழுது மோசம் போவான். ஆலை நூலையே நம்பியிருக்கும் நெசவாளியும் தன் கரும்பைச் சருக்கரையாக்க ஆலையையே நம்பியிருக்கும் விவசாயியும் தன் எண்ணெய் வித்தை எண்ணெய் யாக்க அன்னிய நாட்டு ஆலையை நம்பியிருக்கும் செக்கானும் ஆலை முதலாளிகள் தங்களைக் கைவிட நேரும்பொழுது அதோகதியாய்ப் போய்விடுவார்கள். அவர்களோடும் நிற்காது, அவர்கள் செய்பொருள்களையே நம்பி யிருப்பவர்களும் சங்கடப்படுவார்கள்.

Rural India — J. C. Kumarappa.

2. குடியொழிப்புக் கழகம் ஒரு திட்டமொன்று செய்திருக்கிறது. அதன்படி ஐதராபாத்தில் நகரத்தின் ஒவ்வொரு பாகத்திலும் அந்தந்தப் பிரதேச ஏழைகள் கூடுவதற்கான கட்டடம் ஒன்று அமைக்கப்படும். அதில் அவர்களுக்குச் சாவகாசமான நேரத்தில் வந்து கூடலாம்; ஆகாயவாணி (Radio) பேச்சைக் கேட்கலாம்; சமாசாரப் பத்திரிகைகள் புத்தகங்கள் படிக்கலாம்; உல்லாசமாக விளையாடிப் பொழுது போக்கலாம். ஏழைக் குழந்தைகளை இங்கே திரட்டிக் களிப்புடன் சுத்தமாக வாழவும் கற்பிக்கப்படும்.

Hyderabad Information.

3. கறையானை யொழிப்பதெப்படி ?

கறையானுக்கு உணவாக முடியாத மரங்கள் அல்லது கறையான் பற்றுதிருக்கும்படியாகத் தயாரிக்கப்பட்ட மரங்களைக் கட்டடத்திலுபயோகிப்பதே கறையானுக்கிடங்கொடாமல் கட்டடத்தைப் பாதுகாக்கும் முக்கிய வழியாகும்.

தரைக்கு மேலிருக்கும் கறையான்புற்றை வெட்டியழிப்பதால் கறையானை ஒழித்துவிட முடியாது. பழைய இராணிக் கறையான்கள் செத்துப்போனாலும் புது இராணிக் கறையான்கள் சீக்கிரம் உண்டாகிவிடும். ஒவ்வொரு கறையான் கூட்டத்தையும் நஞ்சைத் தூவி அல்லது புகைபோட்டுப் பூராவுமாகக் கொல்ல வேண்டும். புற்றொன்றுக்கு ஒன்று அல்லது இரண்டு தேக்கரண்டி வெள்ளைப் பாடாணம் (White Arsanic) போடலாம். ஒரு பாகம் கிரிசோட்டும் (Creosote) மூன்று பாகம் மண்ணெண்ணெய் அல்லது பெட்ரோலும் சேர்த்தும் அல்லது கரியிருகந்தகை (Carbon di sulphide) அல்லது கரியிருகந்தகத் திராவகம் (Carbon di sulphide emulsion) அல்லது அர்தோடைக்ளரோ பென்சின் (Ortho di chlorobenzene) அல்லது டிபெனல்மைன் (Diphenylamine) இவற்றை உபயோகிக்கலாம். இந்தத் திராவகங்களைக் கொஞ்சம் கொஞ்சமாக ஊற்றி மேலே மண்ணைப் போட்டு மூடவேண்டும். புகை போகக் கூடிய துவாரங்களிருந்தாலும் களிமண்ணைக்

கொண்டு அடைக்கவேண்டும். பெட்ரோலைத் தனியாக உபயோகிப்பதாலும் பலனுண்டு. கல்சியம் சைனைடைப்(Calcium Cyanide) பொடியாகவும் சிறு சிறு மணிகளாகவும் நீண்ட காண்டியில் போட்டேனும் துருத்தியைக் கொண்டேனும் மற்றப்படிக்கேனும் தூவலாம்.

வெளியேறும் வழிகளைக்கண்டு அவற்றை யடைத்து உள்ளே பூராவும் புகை முட்டும்படி யாகச் செய்தாலன்றி அவற்றைப் பூராவாகவும் ஒழிக்க முடியாது. நாகப் பாஷாணம் (Zinc Chloride) அல்லது செப்புக் கந்தகைக் (Copper sulphate)ஐத்தக்கொன்றாகத் தண்ணீரில் கலந்து தெளிப்பதால் தற்காலிக பலனே நாம் காணலாம்.

Bombay Information.

## இ. இலக்கிய இலக்கண அருங்கலைப் போதனாமுறை ஆராய்ச்சிக் குறிப்புக்கள்

1. இந்தியாவின் வடக்கு எல்லையாகிய இமயமலைவரையுந் தமிழாது வீரம் பரவியிருக்கிறது. கிழக்கே பர்மா தேசம், சாவகத் தீவு முதலிய தேசங்களையுந் தமிழர்கள் வென்று அங்கெல்லாந் தங்கள் கொடியை நாட்டினார்கள். சோழ அரசர்களும், பாண்டிய அரசர்களும், யாழ்ப்பாணத் தமிழ் அரசர்களும் பலமுறை இலங்கைச் சிங்கள அரசர்களைப் போரில் வென்று இலங்கையை ஆட்சி செய்தார்கள்.

சதாசிவ ஐயர்.

2. மன்னனது குடை குளிர்ச்சி செய்து காப்பதுமன்றிப் புகழாகிய ஒளியொடு விளங்கவும் வேண்டுமென்பது கருதி, அது ஒண் மதிபோல் வெண்மையும், தண்மையும் விரவி விளங்க வண்ணமும் வடிவமும் வகுத்தனர் வண்டமிழ்ப் புலவர். இக்கருத்து இடைவிடாது தமிழ்ப் புலவருள்ளத்துக் குடிகொண்டிருந்தமையால், அவர்கள் குடையின் சிறப்பை, பெருநில வேந்தரையும் குறுநில மன்னரையும் பாடிய பாடல்களில், மிக மகிழ்ந்து போற்றியிருக்கின்றனர். மன்பதை புரக்கும் மன்னன் குடையின் மாண்பை நம் தமிழ் நூல்கள் கூறுமாறு வேறெந் நாட்டினும், எம்மொழியினும் பாராட்டுவதைக் காண்கிலேன். ஆதலின், இது ஒரு தனித்தமிழ் மரபென்றே கொள்ளக்கிடக்கின்றது.

3. இன்று நம் தண்டமிழ்த் தாயகம் தமிழர் அரசாட்சியிலிராது, ஆங்கிலேயர் பாதுகாப்புக் குட்பட்டிருக்கிறது. தமிழர் வழக்கொழிந்து, தமிழர் மரபு சிதைந்து, தமிழ்த்தாய் மிக இரங்கத்தக்க இழிநிலை எய்த, தமிழரெனத் தம்மைச் சொல்லிக் கொள்வோரிற் பெரும்பாலோர், தமது தனி நிலையறியாது மயங்கித் தவிக்குமிந் நாளினுங்கூடப் பண்டை வழக்காறாகிய குடை மேம்பாடு நின்றபாடில்லை.........அப்படியிருந்தும்,

"குடை நிழலிருந்து குஞ்சரமூர்ந்தோர்
நடைமெலிந்தோரூர் நண்ணினு நண்ணுவர்"

என்றவாறு, கொண்டு செல்லும் ஊர்தியும் நிழல்தருங் குடையுமின்றி வருந்திநடந்து ஊர் போகுமோர் எளிய மகன்போல், தமிழன்னை நிலையுமுளது. ஆய்ந்து பார்மின்! அவளுக்கு நிழல் தந்து காமின்! பெருமூதாட்டியைப் பேணுமின்! அறம் வளர்த்த அன்னையை, உயிர்கொடுத்துப் போற்றுமின்!

(தமிழணங்கு.) மகிழ்நன்.

4. மகேந்திரன் செய்வித்த கோயில்களில் மிக அழகியவை சித்தன்னவாயில், சிராப்பள்ளி, நாமக்கல் என்ற மூன்று ஊர்களில் உள்ளவைகளே. சித்தன்னவாயில் கோவிலுக்குள் ஐந்து சமண முனிவர் விக்கிரகங்கள் உண்டு. முனிவர் உட்கார்ந்திருக்கும் முறையும், அவர் உள்ளத்தின் அசையா நிலையை முகத்தில் விளக்கிக்காட்டும் சிற்ப வேலைத்திறமும், கண்ணால் பார்த்து அறிந்து ஆச்சரியப்பட வேண்டுமேயன்றி, வார்த்தையால் வர்ணித்துச் சொல்ல இயலாது. அன்றியும் கோயில் முன் மண்டபத்தில் நின்று அண்ணாந்து பார்த்தால், வனப்பு மிகுந்த அன்னங்கள், யானைகள், தாமரைப் பூக்கள், கொடிகள், பெண்ணுருவங்கள் முதலிய சித்திரங்களைக் கலந்து எழுதிய கோலம் ஒன்று தென்படும். கற்பாறை மேல் பல நிறங்களுடைய சாயங்களைக்கொண்டு ஓவியம் எழுதுவதே வியப்பைத்தரும் பணி. அச்சாயங்கள் 1300 வருஷங்களாக அழியாமல், வாடாமல் இருக்குமாறு எப்படித்தான் எழுதினார்களோ, அந்த வழியை அறிய வழியில்லை. பழைய காலத்தில் இவ்வித அற்புதச் சித்திரம் பல்லவ

...ரசர் ஆதரவினால் எழுதப் பெற்றதென் பதைவிடத் தென்னிந்தியர் மனதை மகிழச் செய்யும் செய்தி வேறுண்டோ?

சிராப்பள்ளிக் குன்றின் நடுவில் குடைந்தமைத்த சிவன் கோவிலும் அற்புதமான வேலையே. அதன் மேற்புறச் சுவரில் கற்பதுமைகள் வெட்டி யிருக்கும் பாகம் ஏழடிச் சதுரம். நடு விக்கிரகம் மிகப் பெரியது; கங்காதரனன சிவனைக் கண்ணெதிரிற் கண்டாற்போல் காண்பிக்கும் அவ்விக்கிரகத்தின் முக ஒளியையும், நிற்கும் நிலையையும் பார்த்தால் உயிருடன் உள்ள உருவம் போல் தோன்றும். இவ்வுருவம் சிவனது சடையிலிருந்து விழுவது போலக் காட்டியுள்ள கங்கையை வலது கை ஒன்றில் ஏந்தியும், பூணூலாய்ப் போட்டுக் கொண்டிருக்கும் பாம்பின் தலையை மற்றோர் வலது கையால் பிடித்தும், இடது கையொன்றில் உருத்திராட்ச மாலையும், மற்றொரு கையை இடுப்பில் தாங்கியும் நிற்கும். சுவர் மேல் அமைத்திருக்கும் இச் சிவ விக்கிரகத்தின் வலது காலின்கீழ் முயலகனது சின்னஞ் சிறு விக்கிரக முண்டு. சுற்றி நான்கு அடியார்கள் வணக்கம் செய்வதாயும், மேலே இரு கந்தருவர்களும் ஒரு சிறு மனிதனும் மிதக்குமாறும் செய்திருக்கிறது. அழகிய சித்திர வேலைகள் நிரம்பிய நம்முடைய நாட்டில் இதை விட அதிக வேலைத் திறமான சிற்றுளி வேலை வேறு எங்கும் இல்லை.

நாமக்கல்லில் மலைக் கோயில்கள் இரண்டு உண்டு. அவைகளில் அரங்கநாதன் கோவில் மகேந்திரன் கட்டியதாகும். நரசிம்மன் கோயில் கொஞ்சம் பிந்திய காலத்தில் கட்டப் பெற்றது. மகேந்திரன் செய்த கோயில்களெல்லாவற்றிலும் மிக அழகியது. இங்கிருக்கும் பள்ளிகொண்ட திருமாலின் விக்கிரகத்தை விட உயர்ந்த செதுக்கு வேலை உலகில் எங்கும் இல்லை யென்று கூறலாம். குகைக் கோயிலும் அற்புதமாய்க் குடைந்தது. கோயில் முன் மண்டபத்துக்கு வெளியில் மூங்கிலால் தாழ்வாரத்தைப் போல் மலையைக் குடைந்து காட்டியிருக்கிறது. இக்காட்சியை நேரில் பார்த்தால்தான் புத்திக்குப் புலப்படுமேயன்றி வர்ணிக்க முடியாது.

(பல்லவர் சரித்திரம்) பி. தி. சீனிவாசய்யங்கார்.

---

## ௯. சிறந்த வாசகங்கள் செய்யுள்கள் அறவுரைகள் பழமொழிகள்

I (1) நம் இந்தியச் சுதந்தரப் பட்டயம். (Eight Points Charter for India) முன்னிதழ் தொடர்ச்சி.

6. பேச்சுரிமை : கூட்ட உரிமை : பிறர் மரியாதைக்குப் பங்கமின்றிப் பேசுவதற்கும், சமாதானமாகக் கூடி ஒழுங்காக வேண்டும் காரியங்களைக் கவனித்து வருவதற்கும் ஒவ்வொருவருக்கும் உரிமை யிருக்க வேண்டும். இவை இன்றியமையாத அடிப்படையான உரிமைகளாகும்.

7. நாட்டிற்கேற்ற கல்வி உரிமை : எல்லாருக்கும் ஆரம்பக் கல்வி அவசியம் கொடுக்க வேண்டு மென்பது மட்டும் போதாது. அவரவருடைய போக்கிற்கும் முயற்சிக்கும் ஏற்றதான பலவேறு வகைக் கல்வியும் தரப்பட வேண்டும்.

8. சுய நிர்ணய உரிமை: ஒவ்வொரு வயது வந்தவருக்கும் அரசாங்க ஆட்சியின் போக்கு இன்னவிதமாகத் தானிருக்க வேண்டுமென்று அவரவர் விரும்புவது போல அபிப்பிராயங் கொடுக்கவும், அந்தப்படி அரசாங்க நடை முறைகளை யமைக்கவும் உரிமை யிருக்க வேண்டும்.

Conscience.

2 கெட்ட மனப்பழக்கங்கள் பண்ணுகிற கெடுதி.

நம்முடைய தினசரி வேலையை அமைதியாகவும் ஆத்திரமின்றியும் செய்யப் பழக வேண்டும். இது நம்முடைய வேலைத் திறமையை அதிகப்படுத்தும். வேதத்தில் ஓரிடத்தில் அமைதியே பலம்; நம்பிக்கையே பலம் என்று பொருள்படும் முறையில் சொல்லியிருக்கிறது. அது சரியே. "ஆத்திரப் படாதே" என்பது ஒரு நல்ல குறிக்கோள். அதனை எப்பொழுதும் நமது மனக்கண் முன்னுக்கு வைத்துக்கொள்ள வேண்டும். நாமாகவும் ஆத்திரப் படக்கூடாது. பிறர் நம்மை முடுக்கவும் இடங்கொடுக்கக்கூடாது. காலையில்

விழித்தவுடன், அந்தக் குறிக்கோளை நினைப் போம்; இடையிலும் அதை அடிக்கடி நினைப் போம்; அதன்பொருள் மனதிலே நன்றாக ஊறட்டும்.

நம்முடைய நித்திய வாழ்க்கையிலே நமக்கு எரிச்சலை உண்டாக்குகிற காரியங்கள் அனேகம் இருக்கின்றன. அவற்றில் சத்தம் அல்லது இரைச்சல் ஒன்று. அஃது அங்கிங் கெனாதபடி எங்கும் பிரசன்னமாயிருக்கிறது. நாம் என்ன செய்தாலும் சரி, நாம் அதனிடத் திலிருந்து தப்பமட்டும் முடியாது. அது எங்கும் இருக்கும்; எப்பொழுதும் இருக்கும்; அது பிறக்கும் இடங்களையும் அதன் வகை களையும் எண்ணிமுடியாது; அது வீட்டுக் குள்ளிருந்தும் வரும்; வெளியே தெருக்களி லிருந்தும் வரும்; நாம் அதைக்குறைக்கவோ, அதற்குத் தப்பவோ முடியாது. நாம் ஒன்று செய்யலாம். அதற்குப் பழக்க மாகிக்கொள் ளலாம். காதுத் தோலைத் தடிக்க வைத்துக் கொள்ளலாம். பிறகு இரைச்சல் நமக்கு ஒரு தொல்லையாக இருக்காது.

நம்மில் அனேகருக்கு அளவுக்கு மிஞ்சின வெறுப்புக்களும் விரோதங்களும் சில்லறைத் துவேசங்களும் இருக்கின்றன. இவற்றால் நம் முடைய நரம்புச்சத்தி நாசமாகப் போகிறது. இதற்கு நாம் இடங்கொடுக்கக்கூடாது. இந்த மாதிரிக் காரியங்கள் சம்பந்தமாக நம்முடைய மனத்தை மாற்றிக் கொள்ளப் பிரயாசைப்பட வேண்டும். நம்முடைய சகிப்புத்திறனை அதி கப்படுத்திக்கொள்ள வகை தேடவேண்டும். "இரைச்சல் ஒரு அற்பக் காரியம். அது என்னை உபத்திரவப் படுத்துவதற்கு நான் என்ன அவ்வளவு சோதாவா! இந்த மாதிரிக் காரியங்களை யெல்லாம் இனி நான் அலட்சியம் செய்யப் போகிறேன்; இனி எரிச்சல் அடையப் போவதில்லை. என்னுடைய நரம்புச் சத்தி ஏன் இப்படி நாசமாகப் போக வேண்டும்?" என்று சங்கற்பம் செய்து கொள்ளவேண்டும். நம் முடைய வாழ்க்கைப் போக்கு முழுவதும் நம் கையில் இல்லை. நாம் எதிர் பாராத [illegible] கள் அனேகம் நடக்கும். வருத்தமும் [illegible]ப்பும் துன்பமும் வரத்தான் செய்யும். ஆனால், நாம் இதற்கெல்லாம் தோற்றுவிடக்கூடாது. அவற்றைத் தைரியமாகச் சகிக்கவேண்டும்.

மன நிம்மதியாகிய கலையைப் படிப்பது இலேசான காரியமல்ல. அதற்கு நம்முடைய முயற்சியை இரண்டு திக்குகளில் செலுத்த வேண்டும். ஒன்று தேகம் சம்பந்தமாக, அடுத்தது மனம் சபந்தமாக.

முதலாவது, நமது தேகத்தை அடக்கப் பழக்க வேண்டும். தேகத்தை அடக்கவேண் டும் என்பதினாலே, அதற்கு யோகாப்பியாசங் கள் சொல்லப் போகிறேன் என்று எண்ணி விடாதீர்கள். அப்படியொன்று மில்லை. நான் சொல்லப் போவதெல்லாம் சின்னக் காரியங் கள் தான். இவற்றிலே நாம் வெற்றியடைந் தால், பெரியகாரியங்களிலும் அடைவோம் என்ற திண்ணமும் ஊக்கமும் ஏற்படும். நாற் காலியிலே உட்கார்ந்து கொண்டிருக்கும் போது எப்படி இருக்கிறோம்? ஆறுதலாக அமைதியாக இக்கிறோமா? அல்லது காலை ஆட்டிக்கொண்டேயிருக்கிறோமா? பென்சிலை அப்படியும் இப்படியுமாகத் திருப்பிக் கொண் டே யிருக்கிறோமா? பேனாக்கட்டை முனை யைக் கடித்துக்கொண்டே யிருக்கிறோமா? மீசை மயிரை ஒவ்வொன்றாக இழுத்துச் சப் பிக்கொண்டிருக்கிறோமா? இவையெல்லாம் சின்னக் காரியங்கள் தான். ஆனால் இவற்றால் நரம்புச் சத்தி வீணாகிறதென்பதை மறந்து விடக்கூடாது. நாற்காலியிலே கைகாலை ஆட்டாமல் அமைதியாக இருக்கப் பழகவேண் டும். இது ஒரு நல்ல அப்பியாசம். இதை இப் பொழுதே செய்யலாம். இந்த மாதிரி இன்னும் எத்தனையோ காரியங்கள் இருக்கும். நமது தேக, நரம்புச் சத்திகளை ஒரு வகையிலும் வீணாகப்போக விடக்கூடாது. (தொடரும்)

II. மெய்ம்மையாம் உழவைச் செய்து விருப்பெனும் வித்தை வித்திப்
பொய்ம்மையாம் களையை வாங்கிப் பொறை யெனும் நீரைப் பாய்ச்சித்
தம்மையும் நோக்கிக்கோண்டு தகவெனும் வேலியிட்டுச்
செம்மையுள் நிற்பாராகில் சிவகதிவிளையுமன்றே.

III. 1. தன்னைப் பெற்ற தாய் கிண்ணிப் பிச்சை வாங்க, தம்பி கும்பகோணத்தில் கோதானம் பூதானம் செய்கிறான்.

2. சொல்வது யார்க்கும் எளிதாம்; அரிதாம் சொல்லிய வண்ணம் செயல்.

## 1942-ஆம் பிப்ரவரி—மார்ச்மீ
## விசு-ஆம் தை - மாசி மீ கொல்லம் 1117-ஆம்

### திதி, நட்சத்திரம், தியாச்சியம் முதலியவை.

| இ. | | த. | | கிழ. | |
|---|---|---|---|---|---|
| 1 | பிப்ரவரி மீ | 19 | | ஞா | பௌ-25-2, பூச-13-59, ரா-18.5, தைப்பூசம். |
| 2 | | 20 | | திங் | பிர-25-45, ஆயி-16-20, ரா-17.46. |
| 3 | | 21 | | செ | துதி-25-11, மக-17-26, ரா-8-18. |
| 4 | | 22 | | புத | திரு-23-24, பூர-17-20, ரா-5-50. |
| 5 | | 23 | | வியா | சது-20-33, உத்தி-16-10, ரா-8-15. |
| 6 | | 24 | தை மீ | வெ | பஞ்-16-44, அத்-14-4, ரா-3.54. |
| 7 | | 25 | | சனி | சட்டி-12.7, சித்-11-9, தியி-24-20. |
| 8 | | 26 | | ஞா | சப்-6-56, சுவா-7-42, தியி-20.48. |
| 9 | | 27 | | திங் | அட்-1.20, நவ-54-13, விசா-3-49, தியி-13-9. |
| 10 | | 28 | | செ | தச-49-45, கேட்-55-42, தியி-9-53. |
| 11 | | 29 | | புத | ஏகா-44-6, மூல-51-50, தியி-14-25. |
| 12 | | 1 | | வியா | துவா-38-50, பூரா-48-15. 14-25, கும்பரவி-13.55. [விடுமுறை. |
| 13 | | 2 | | வெ | திரயோ-34-5, உத்திரா-45-27, தியி-7-19, ரா-25-48, பிரதோடம், மகாசிவராத்திரி |
| 14 | | 3 | | சனி | சதுர்-30-5, திருவோ-43-20, ரா-23-48. ● |
| 15 | | 4 | | ஞா | அமா-27-0, அவிட்-42-10. |
| 16 | | 5 | | திங் | பிர-24-59, சத-42-0, தியி-0-7, ரா-28-56. |
| 17 | | 6 | | செ | துதி-24-9, பூரட்-43-9, சேடம்-2-3. |
| 18 | | 7 | | புத | திரு-24-37, உத்திரட்-45-29, தியி-8-5, சதுர்த்தி. |
| 19 | | 8 | | வியா | சது-26-22, ரேவ-49-2, தியி-17.15. |
| 20 | | 9 | | வெ | பஞ்-29-20, அசு-53-43, ரா-13-27. |
| 21 | | 10 | | சனி | சட்டி-33-18, பர-59-14, தியி-19-55, சட்டி, முந்தின சனி விடுமுறை. |
| 22 | | 11 | | ஞா | சப்-38-0, கார்-60-0, ரா-2-53, கார்த்திகை. |
| 23 | | 12 | | திங் | அட்-43-42, கார்-5-27, ரா-20-16. |
| 24 | | 13 | மாசி மீ | செ | நவ-48-26, உரோ-11-55, தியி-27-23. |
| 25 | | 14 | | புத | தச-53-14, மிருக-18-11, ரா-0-43. |
| 26 | | 15 | | வியா | ஏகா-57-25, திருவா-23-55, ரா-26-51, ஏகா, கரிநாள் |
| 27 | | 16 | | வெ | துவா-60-0, புனர்-28-51, சேடம்-0-8, ரா-20.35. |
| 28 | | 17 | | சனி | துவா-0-30, பூச-32-42, பிரதோடம், கரிநாள். |
| 1 | மார்ச் மீ | 18 | | ஞா | திரயோ-2-28, ஆயி-35-22, தியி-6-7. |
| 2 | | 19 | | திங் | சதுர்-3-0, மக-36-45, தியி-6.4, ரா-27-13, ○ பௌர்ணமி, மதி மறைவு. |
| 3 | | 20 | | செ | பௌ-2-21, பூர-36-58, சேடம்-0-35, ரா-25-2, சூரியகிரகணம் இந்துவிடுமுறை. |
| 4 | | 21 | | புத | பிர-0-31, துதி-56-54, உத்தி-36-0, ரா-27-40. |
| 5 | | 22 | | வியா | திரு-53-31, அத்-34-8, சேடம்-1-4, ரா-23-33. |
| 6 | | 23 | | வெ | சது-48.45, சித்-31-24, ரா-14-55. |
| 7 | | 24 | | சனி | பஞ்-43-29, சுவா-28-2, ரா-11-27. |
| 8 | | 25 | | ஞா | சட்டி-37-50, விசா-24-16, ரா-3-52. |
| 9 | | 26 | | திங் | சப்-31-59, அனு-24-14, ரா-3.31. |
| 10 | | 27 | | செ | அட்-26-7, கேட்-16-7, ரா-5-1. |

Regd. No. 4126.

அன்புநிலை
தேடும் பருவமிது கண்டீர்; சேரவாரும், செகத்தீரே.—தாயுமானவர்.

# "கிராம தூதன்."

## ஒரு கிராம முன்னேற்ற தேசிய மாதப் பத்திரிகை.

கிராம முன்னேற்றமே, தேச முன்னேற்றமாகும். கிராம முன்னேற்றத்திற்கும் நகர வாசிகள் சுக வாழ்விற்கும் அவசியமான விபசாயம், கூட்டுறவு, கைத்தொழில், குடிசைத்தொழில், கல்வி, சுகாதாரம், குடும்ப வாழ்க்கை பற்றிய பல நல்லுரைகளும், கதைகளும், மற்றும் கிராம வாசிகள், விபசாயிகளுக்குப் பிரயோசனமான செய்திகளும், அறிவுரைகளும், பஞ்சாங்கம் முதலியனவும் பிரதி அங்கிலமாதம் முதல் ஐந்து தெய்திக்குள் இந்தப் பத்திரிகையில் வெளி வரும். இதைப் படித்து, இதில் காணும் நலங்களைப் பிறர்க்குச் சொல்லுங்கள். சந்தேகம் தோன்றினால், குறை ஏதும் கண்டால் பத்திராதிபருக் கெழுதுங்கள்.

வி. பி. தபாலினால், சந்தாதாருக்கு அனாவசியமாகத் தபாற்செலவு அதிகமாவதால், இந்தப் பத்திரிகையை வி. பி. யில் அனுப்புவதில்லை. சந்தா முன் பணமாகச் செலுத்தியிருக்கும் காலம்வரைக்கே பத்திரிகை யனுப்பிவரப்படும்.

பத்திராதிபர்.
இரா. கு. நல்லகுற்றாலம் பிள்ளை,
சிவில்லிபுத்தூர்.

பிரசுரகர்த்தர்.
இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன்,
வடக்குச் சித்திரை வீதி, மதுரை.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| உள்நாட்டு வருடச்சந்தா | ... | ரூ | 1—0—0 | ஒரு பக்கம் விளம்பரம் ஒரு தடவை | 10—0—0 |
| வெளி ,, | ... | ரூ | 2—0—0 | அரைப்பக்கம் ,, | 6—0—0 |
| தனிப் பிரதி விலை | ... | ரூ | 0—1—6 | கால்பக்கம் ,, | 3—0—0 |

1-வது மலர் (1939-ம் ஆண்டுத்திய 12 இதழ்கள்) 2-வது மலர் (1940-ம் ஆண்டுத்திய 12 இதழ்கள்) 3-வது மலர் (1941-ஆண்டுத்திய 12 இதழ்கள்) பைண்டு செய்து சில பிரதிகளேயிருக்கின்றன.
தனித்தனி விலை ரூ. 1—4—0

## கால்நடைச் சந்தைகளும் விபசாயக் கண்காட்சிகளும்

(பிப்பிரவரி-மார்ச்சு மாத பஞ்சாங்கம் உட்பக்கம் பார்க்க.)

திருசிராப்பள்ளி சில்லா கரூர் தாலுகா உப்பிடமங்கலத்தில் ஞாயிற்றுக்கிழமை தோறும், பரமதியிலும் முசிரித் தாலுகா தோட்டியத்திலும் செவ்வாய்க்கிழமை தோறும், குளித்தலைத் தாலுகா மணப்பாரையில் புதன்கிழமை தோறும் கால்நடைச் சந்தைகள் நடைபெற்று வருகின்றன. கோயம்புத்தூர் தாலுகா துடியலூரில் திங்கட்கிழமை தோறும் கோபிச்செட்டிபாளையம் தாலுகா புளியம்பட்டியிலும் பொள்ளாச்சியிலும் வியாழக்கிழமை தோறும் கால்நடைச் சந்தைகள் நடைபெற்றுவருகின்றன.

தஞ்சாவூர் சில்லா கும்பகோணம் தாலுகா நீலத்தநல்லூரில் மகம் உற்சவத்தின் பொழுது சுமார் ஒரு மாதம் (பிப்பிரவரி-மார்ச்சு மாதம்) கால் நடைச்சந்தை நடைபெறும். அப்பொழுது கால் நடைக் காட்சியும் நடைபெறும். திருநெல்வேலி சில்லாவில் திருச்செந்தூரிலும் கீழவீராகவபுரத்திலும் தருவையிலும் மகத்தையொட்டிப் (பிப்ரவரி மாதம்) பதினைந்து நாள் கால் நடைச்சந்தைகள் நடைபெறும்.

Printed at the Excelsior Power Press, North Chitrai St., Madura:-42.